# சத்திய வேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA.

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER

Telephone : No. 300

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

85-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1960-ம் ஆண்டு பங்குனி மாதம் 10-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 10-ம் இலக்கம்


## யுத்தகாலத்திலே வத்திக்கான் இராச்சியம்

யுத்தம்ஒன்று மூண்டுகொள்ளும் காலத்தில் வத்திக்கான் இராச்சிய பிரதேசத்தைக் கௌரவித்துக் காத்துவைப்பதாக உறுதியளித்துள்ள அநேகநாடுகளில் சோவியற்ருஷியாவும் அடங்கியிருப்பதாய் ரோமைநகர் வானொலி அறிவித்திருக்கிறது. ஏனையநாடுகளிலே பிரித்தானி, பிரான்ஸ், மற்றும்சில தூரகிழக்குநாடுகளும் அடங்கும். அத்துடன் யுத்தம்ஒன்று ஏற்படுங்கால் இராணுவமுகாந்திரங்களுக்கென வத்திக்கான் இராச்சிய எல்லைகள்நீளம்செல்லுகின்ற 'வியா ஓறேலியா' வைத்தான் உபயோகிப்பதில்லையென்று இத்தாலி உறுதிவாக்களித்திருக்கிறது. ஐக்கியநாடுகளின் கல்வி, விஞ்ஞான, கலாசார ஸ்தாபனத்தின் பரீஸ்நகர காரியாலயத்தாலே ஒழுங்குபண்ணப்பட்டுவரும் கலாசாரஸ்தாபனங்களின் சர்வதேச பதிவுஇடாப்பில் வத்திக்கான்இராச்சியம் பதிவுசெய்யப்பட்டபின்னரே அந்நாடுகள் உறுதிவாக்குஅளிக்கலாயின.

கலாசார சொத்துகளைப் பாதுகாப்பதற்கெனக்கூடிய சர்வதேச மகாநாட்டின் தீர்மானப்படி சித்தஞ்செய்யப்பெற்ற இந்தப் பதிவுஇடாப்பு நெதர்லாந்தைச் சேர்ந்த ஹேக்நகரில் 1954-ம் ஆண்டு ஐக்கியநாடுகளின் கல்வி, விஞ்ஞான, கலாசார ஸ்தாபனத்தின் ஆதரவில்நடைபெற்ற கூட்டமொன்றில் ஏகமனதாக அங்கிகரிக்கப்படலாயிற்று. இராணுவமுகாந்தரங்களுக்கென்று கலாசாரசொத்தைப் பயன்படுத்துவதைத் தடைசெய்வதும், சரித்திரபூர்வமான கட்டடங்கள், நூதனபொருட்காட்சிச்சாலைகள், நூல்நிலையங்கள், சித்திரவிசித்திர, விஞ்ஞானப்பொருட்கள் சேகரித்துவைக்கப் பட்டிருக்கும்சாலைகளைப் பாதுகாத்துவைக்க உத்தரவாதஞ்செய்வதுமே இந்தமகாநாட்டின் பிரதமநோக்கங்களாகும். இதன்கீழ்விசேஷவிதமாகப் பதியப்பட்டிருப்பவைகளில் வத்திக்கான்இராச்சியமே முதல்ஸ்தானம் வகித்திருக்கிறது. இத்தகைய பாதுகாப்பைப் பெறவிருக்கும் ஒரேயொருமுழுஇராச்சியம் இதுவாயிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவதுஉலகயுத்தத்திலே பரிசுத்தஸ்தானம் நடுநிலைமை வகித்த ஓர்சுயாதிபத்திய இராச்சியமாயிருந்தும் தனது எல்லைச்சுவர்களுக்குவெளியே யுத்தத்தை முற்றாகத் தடுத்துவிடமுடியாதிருந்தது. ஜேர்மனியர்கள் ஆக்கிரமித்திருந்தபோது பாப்பரசரது இராச்சியத்தின் நடுநிலைமை கௌரவித்துப் பாதுகாக்கப் பட்டுவந்தபோதிலும்பிறநாடுகள் ஆக்கிரமிக்கக்கூடுமென நினைந்து, வேண்டியபாதுகாப்புநடவடிக்கைகளை வத்திக்கான்அதிகாரிகள் எடுத்திருந்தார்கள். இந்தநடவடிக்கைகளில்ஒன்று, வத்திக்கானின் மதில்களுக்குவெளியே பலம்பொருந்திய உருக்குவேலி அமைக்கப்பட்டமையாகும். மற்றொன்று, ரோமைநகரிலுள்ள வத்திக்கான் சொத்துகளைக் காவல்பண்ணுவதற்கென்று 2,000வீரர்களைக் கொண்டதென மதிப்பிடப்படும் ஒருவிசேஷ பாதுகாப்புப்படை திரட்டப்பட்டமையாகும். ஏனையநடவடிக்கைகளில், சுவிஸ்காவலர் தொகை 100பேரிலிருந்து 600பேராகவும், பாப்பரசரின் இராணுவகாவலர் தொகை 800பேரிலிருந்து 3,000 பேராகவும், பலாற்றினிய காவற்படை நாலுமடங்காக—அதாவது 2,000பேராகவும் அதிகரிக்கப்படலாயின. சந்தர்ப்பம்நேருமிடத்து, யந்திரப்பீரங்கிகளின் பாதுகாப்புக்கென்று இராச்சியமதில்கள் சித்தஞ்செய்யப்படலாயின. 1943-ம்ஆண்டின் கார்த்திகை மாதத்திலும், அடுத்ததை, பங்குனிமாதங்களிலும் ரோமைநகரைநோக்கி நேசபடைகள் முன்னேறிய மூன்றுசந்தர்ப்பங்களிலே இந்தச்சிறியஇராச்சியத்தில் குண்டுகள்விழுந்தன. ஆனால்,அவைகள் கடும்சேதம் உண்டுபண்ணவில்லை.

## வத்திக்கான்இராச்சிய பொக்ஷசாலை

[சங். வேர்ஜினியா மேரி தாயார் எழுதிய ஓர்கட்டுரையின் தமிழாக்கம்]

(முன் தொடர்ச்சி)

இந்தஅநாதசாலை சுமார்30வருடங்களுக்குமுன்னே வெறோனவிலிருந்துபோன டொன்நிக்கொலா மஸாஎன்ற ஒருகுருவானவரால் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இவர் தமது அநாதர்கள்மட்டிலே மிகுந்தபற்றுதல்கொண்டிருந்தார். தங்களுடைய கைப்பணிகளிலே—விசேஷமாய்ப் பல்வேறுமாதிரியான சித்திரத்தையல் வேலைகளிலே அவர்கள் நீதியான பெருமை அடையவேண்டுமென அவர் வெகுவாகஆசித்தார். அவர்களின்திறமைகளுக்கு ஓர் தூண்டுதலாக மிக்கேல் ஆஞ்ஜெலோ என்ற உலகப்பிரசித்திபெற்ற சைத்திரிகரின் சித்திரமாதிரியிலே சித்திரத்தையல் வேலைப்பாடுஒன்றைச் செய்விக்கவேண்டுமென்ற ஓர்சிறந்தஎண்ணம் அவர் மனதில்பிறந்தது.

பழையஏற்பாட்டுடனும், புதிய ஏற்பாட்டுடனும் சம்பந்தப்பட்டனவாய் மிக்கேல் ஆஞ்ஜெலோவால் தீட்டப்பெற்ற கீர்த்திபெற்றபடங்களின் பிரதிரூபங்களைச் சித்திரத்தையல் வேலைப்பாட்டில்அமைத்து, பூரணமான ஓர்கூட்டம்பூசையுடுப்புகளைச் சுவாமியார் செய்வித்தார். ரின்ரொறெற்றோஎன்ற சைத்திரிகர்தீட்டிய "கிறீஸ்துநாதரின் பிறப்பு"என்றபடத்தின் பிரதிரூபம் தோளுக்குரியவேலில் சிறப்பாகஅமைக்கப்பட்டது. இறப்பாயேல், கியொற்ரோ, பெரூஜிஞோ, பிருஆஞ்ஜெலிக்கோ முதலாம்சைத்திரிகர்களது படங்களின்பிரதிரூபங்களும் [illegible] திறமையுடன் [illegible] களிலே சித்திரத்தையல்கொண்டு அழகுறச்சித்திரிக்கப்பட்டிருந்தன.

இதிலிருந்து சிலஅடிகள்மாத்திரம் காலெடுத்துவைத்து அப்பாற்சென்றால் அநேக சொருகுபெட்டிகளைக்கொண்ட பலமான ஒருபெட்டகம் இருக்கின்றது. இது ஒன்றுக்கொன்று மிகவேற்றுமையான, ஆனால், விதம்விதமானவிலையேறப்பெற்ற பூசைவஸ்திரங்களைக் கொண்டிருக்கிறது. பாப்பரசரின் இந்தப் பொக்ஷசாலையைப் பாதுகாத்துவருகிறவரான சங். வின்செசன்ஸோ மிச்செலிபிறதர் இந்தப் பெட்டகத்தைத் திறக்கும்போதெல்லாம் மிகுந்தஆசாரத்துடன் நடந்துகொள்ளுகிறார். சொருகுபெட்டிஒன்றிலே அர்ச். 10-ம் பத்திநாதபாப்பானவர் கூடுமானபோதெல்லாம் அணியத்தெரிந்துகொண்ட எளிமையும், நெடுங்காலஉபயோகத்தால் மங்கிப்போனவையுமான திருஅங்கிகள் இருக்கின்றன.

ஏனைய சொருகு பெட்டிகளில் அவற்றைப்போலவே ஆடம்பரமற்றனவாய் 7-ம் பத்திநாத பாப்பானவராலும், 9-ம் பத்திநாத பாப்பானவராலும் நல்லவையெனத் தெரிந்து அணியப்பட்ட சாமானிய பூசை வஸ்திரங்கள் இருக்கின்றன. இந்தத் திருஅங்கிகள், பூசை வஸ்திரங்களைக் காண்பிக்கும்போதெல்லாம் வின்செசன்ஸோபிறதர் "இந்தப் பாப்புமார்களில் ஒருவர் அர்ச்சியசிட்ட பட்டம் [illegible] அருளப்பட்டிருக்கிறார்; மற்ற இருவரும் அத்திருப்பட்டம் அருளப்படும்பாதையில் இருக்கின்றனர்"என்று மெதுவாகச் சொல்லுகிறார்.

ஆனால்,அதிகம்தாழ்மையும், அடக்கமுமுள்ள பாப்புமார்தானும் பெரும்திருவைபவங்கள் நிகழும் சுபசந்தர்ப்பங்களிலே பெரிதும்ஆடம்பரமான திருவஸ்திரங்களை அணிந்துகொள்ளுகின்றனர். உயர்தரகுருசிரேஷ்டர்களின் ஞானாதிகாரசின்னமாக அவர்களுக்குப் 'பல்லியம்"எனப்படும் திருஅங்கியை வழங்கும்போது, ஓர்பாகம் சுத்ததங்கநூலினால் நெய்யப்பட்ட விலைபெற்றகாப்பைஒன்றைப் பாப்பானவர் உபயோகிக்கின்றார். முத்திப்பேறுபெற்றபட்டம் அருளும் திருவைபவங்களின்போது அபூர்வமான பிரான்ஸிய சித்திரத்தொங்கலாடைகொண்டு தயாரித்த மற்றோர்காப்பையைச் சிலவேளைகளில் அணிந்துகொள்ளுகின்றார்.

தங்கவஸ்திரம்கொண்டு தயாரிக்கப்பெற்ற "ஓர்""சகூபிள்"மீது அர்ச். பிரான்சீஸ் அசீஸியாரின் வாழ்க்கைவரலாறு சித்திரிக்கப்பட்டிருக்கின்றது. 1926-ம் ஆண்டுவந்துபோன ஒருநூற்றாண்டுவிழாவைமுன்னிட்டுப் பிரான்சீஸ்கன்சபையாரால் பாப்பானவருக்கு வழங்கப்பெற்ற ஓர்வெகுமானம் இதுவாகும். பாப்பானவரின் திருவஸ்திரங்களுள் கறுப்புவஸ்திரங்கள் இல்லையென்பது ஈண்டுகுறிப்பிடத்தக்கது. ஏனெனில், பாப்பானவர் "சீவியரானதேவ"னின்

[தொடர்ச்சி 5-ம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...யூபிலிவிழா

...வைச்சபைக் கன்னியாஸ் ...வர் ஓர்கன்னிகா சபைக்கு ...மே உரியதான அடக்க ...மைதியுமான சிறப்பு முழுவ ...ம் சமீபத்திலே தங்கள்வெள்ளி ...லிவிழாவைக் கொண்டாடியபோது ...லங்கைக்கும், அவர்களின் கன்னி ...சபைக்குமே அஃது ஒருதனிப்பெரு ...மைவாய்ந்த நிகழ்ச்சியாயிற்று. ஏனெனில், அம்மூவருள்ளும் மென்சிங் கென்சுா திருச்சிலுவைக் கன்னிகா சபையில் இற்றைக்கு 25வருடங்களின் முன் சேர்ந்துகொண்ட முதலாவது இலங்கைப்பெண்மணியும் ஒருவராயிருந்தார்.

யாழ்ப்பாணம், கடற்கரைவீதியிலுள்ள சபையின் மாகாணதாய்மடத்திற்கு நம்மேற்றிராணியாண்டவர்கள் எழுந்தருளியதோடு யூபிலி விழாக் கொண்டாட்டம் ஆரம்பமாயிற்று. அவர் யூபிலிநாயகர்கள் மூவருக்குமாகத் திவ்வியபூசைப்பலி நிறைவேற்றிச் செய்தருளிய மனவுருட்சிக்குரிய பிரசங்கத்திலே, தாழ்மையும், பகிரங்கமாகப் பலகாலும் அறியப்படாததுமான கன்னியாஸ்திரிமாரின் திருத்தொண்டு பெரிது,பெரிதுஎன்று உலகம் எண்ணுகிற அளவைக்காட்டிலும் எவ்வளவோ அதிகம்பெரிதாய், உலகத்துக்கு மகத்தான இரட்சணியபெறுமதியுடையதாய் இருக்கிறதெனக் கூறலாயினர்.

திவ்வியபூசையைத் தொடர்ந்து தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளப்படலாயிற்று. அதிலே யூபிலிநாயகர்கள்மூவரும் ரோஸாமலர் முடிசூடியவர்களாய்க் கரங்களில் எரிகின்றமெழுகுவர்த்திகளுடன் தங்கள்கன்னிகாவாக்குத்தத்தங்களைப் புதுப்பித்தனர். இவர்களில் சங். சிஸ்றர்பிலோமினு மனுவேற்பிள்ளை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். காலஞ்சென்றமனுவேற்பிள்ளை தம்பதிகளின் ஏகபுதல்வி சங். சிஸ்றர்பெர்னதேத் கோர்ப், ஜேர்மனியைச் சேர்ந்தவர். 1938-ம்ஆண்டு முதல் இலங்கையிலே தொண்டாற்றி வருகின்றார். சங். சிஸ்றர் அன்ரோனிஞ புமில்லர், ஜேர்மனியைச்சேர்ந்தவர். 1939-ம்ஆண்டுமுதல் இலங்கையிலே தொண்டாற்றிவருகிறார். யூபிலிநாயகர்கள்வாழ்க!

## 125-ம் ஆண்டு நிறைவுவிழா

### 1835—1960

தெகிவலை பரிசுத்ததேவமாதா ஆலயத்தின் 125-ம்ஆண்டு நிறைவுவிழாக் கொண்டாட்டம் சென்றமாசிமாதம் 13-ம் 14-ம்திகதிகளில் அதிவிமரிசையாக நடந்தேறியது.

இதற்கு ஆயத்தமாக மாசிமாதம் 5-ந்திகதிதொடக்கம் 12-ந்திகதிவரை ஒருஞானவொடுக்கம் போதிக்கப்படலாயிற்று. அந்நாட்களிலே மாலை6-30 மணிக்கு வண. வின்சென்ற் வீரக்கொடி சுவாமியவர்கள் சிங்களத்திலும், மாலை 7-00மணிக்கு வண. மாட்டின் குணரத்தினசுவாமியவர்கள் ஆங்கிலத்திலும் பிரசங்கஞ்செய்தார்கள். பின்னர் சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்பட்டது. சுமார்பத்தாயிரம் மக்களைக்கொண்ட இவ்விசாரணைப்பங்கிலுள்ள கத்தோலிக்கமக்களில் ஏறக்குறைய எல்லோருமேஞானவொடுக்கத்தில் பங்குபற்றியிருந்தார்கள்.

13-ந்திகதியன்று ஆலயம் அலங்காரமாட்சியுற்றுவிளங்க, மின்சாரதீபங்கள் பிரபைவீசிஇலங்க, எங்குமே அழகிய படங்களும், துவசங்களும், மலர்மாலைகளும், மகரதோரணங்களும் பொலிந்துகாட்சியளித்தன. மாலை5-30 மணிக்கு மக்கள்பெருந்திரளாகச் சமுகமளித்திருக்க, கண்டிப்புதியமேற்றிராணியாரான மகாவந். லீயோ நாணயக்கார ஆண்டகையவர்களை வரவேற்க இலங்கைஇராணுவ பாண்டுவாத்தியக் கோஷ்டி தயாராக இசைத்துக்கொண்டிருந்தது. ஆண்டகையவர்கள் 5-35 மணிக்கு வந்துசேரவே, தெகிவலைக் கட்டளைக்குரவரும், மற்றும்குருப்பிரசாதிகளும் பட்டினசபைத்தலைவர் திரு. எல். வி. குணரத்தின அவர்களும் அவரைவரவேற்றார்கள். பரிசுத்த காணிக்கைமாதாவின் யூபிலிச்சுரூபம் ஆண்டகையவர்களால் ஆசீர்வதிக்கப்பெற்று வீதிவழியே சுற்றுப்பிரகாரமாய் எடுத்துச் செல்லப்பட்டது. கட்டளைக்குரவர் வண. சிறில் பீரிஸ் சுவாமியவர்களும், உதவிக்குரவர் வண. பேணுட் பெறேறுசுவாமியவர்களும் சுற்றுப்பிரகாரத்தை ஒழுங்காக முனனின்று நடத்தினர்கள். சுமார் 60குருப்பிரசாதிகளும், 30கன்னியாஸ்திரிகளும், 5,000மக்களும் அதில் கலந்துகொண்டனர். சுற்றுப்பிரகாரம் முடிந்ததும் கண்டிமேற்றிராணியார் ஆங்கிலத்தில் பிரசங்கஞ்செய்தார். முடிவில்வேஸ்பர்பாடித் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பட்டது.

14-ந்திகதியன்றுகாலை 8மணிக்குக் கொழும்புஅதிமேற்றிராணியாரான மகாமேன்மைதங்கிய தோமஸ்கூறே ஆண்டகையவர்கள் இங்கு எழுந்தருளவே, இராணுவ பாண்டுவாத்திய ஓசையுடன் பலகுருப்பிரசாதிகளும், மக்களும் அவரைவரவேற்றார்கள். அப்போது இவ்வைபவத்திற்கென்று பரிசுத்த பாப்பரசரால் அனுப்பப்பட்ட வாழ்த்துச்செய்தி ஆசீர்வாதத்தையும் அவர்கையளித்தார். அதன்மேல் பெரியபாடற்பூசை ஆரம்பமானது. பூசையின்போது அவரால்அரியதொரு பிரசங்கம் செய்யப்பட்டது. பூசைமுடிவில் திவ்வியசற்பிரசாதஆசீர்வாதம் அவரால் அருளப்படலாயிற்று. இவ்விழாவைச் சிறப்பாக ஒழுங்கு செய்த வண. பங்குக்குருவருக்கும், உதவிக்குரவருக்கும் இப்பங்கு மக்கள் சார்பிலும், எனதுசார்பிலும் நன்றி கூறுகிறேன்.

—பொலிகாப் கோமஸ்

## பெற்றோர் தினவிழா

சலாபப்பிரிவைச்சேர்ந்த போளவத்தைக் கத்தோலிக்க தமிழ்ஆண்பாடசாலையின் பெற்றார்தினவிழா கடந்த 28-2-60 ஞாயிற்றுக்கிழமைபிற்பகல் 4மணிக்குச் சலாபமேற்றிராசன கத்தோலிக்கபாடசாலைகளின் பொதுமுகாமைக்காரர் அதிவந். வி. மைக்கல் பெரேராசுவாமியவர்கள்தலைமையில் ஆரம்பமாயிற்று. மாணவர்கள் வரவேற்புக்கீதம்பாடித் தலைவரையும், பங்குக்குரவர் வண. மேர்வின் பீரிஸ் சுவாமியவர்களையும் மாலைசூட்டி வரவேற்றபின் பாடசாலை உதவி ஆசிரியர் திரு. ஏ. றேமண்டஸ் அவர்களால் பாடசாலைஅறிக்கை படித்துக்காட்டப்பட்டது.

தொடர்ந்து தலைவர்உரைக்குப்பின் சலாபம் சென்மேரிஸ் சிரேஷ்ட தமிழ் ஆண்பாடசாலை அதிபர் சங். சகோதரர் டபிள்யு. எஸ்.பீரிஸ்அவர்கள் "பாலரும் ஆரம்பக்கல்வியும்" என்பதுபற்றியும், முந்தல் கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலைத் தலைமைஆசிரியர் திரு.டபிள்யு. எலியாஸ் லோவ்அவர்கள் "பெற்றாரும் பாடசாலையும்" என்பதுபற்றியும், வடமேல்மாகாணத் தமிழாசிரியர்சங்கக் காரியதரிசி திரு. வீ. எஸ். பிள்ளை அவர்கள் "மாணவரும் தற்காலக்கல்வியும்" என்பதுபற்றியும், போளவத்தைப் பாடசாலைத் தலைமைஆசிரியர் திரு. எஸ். எஸ். றெட்றீக்குஅவர்கள் "பெற்றாரும் சமயகல்வியும்" என்பதுபற்றியும், திரு. டபிள்யு விக்ரோறியான் பெர்ணுண்டு அவர்கள் "தாய்மொழிக்கல்வி" என்பது பற்றியும் இனியசொற்பொழிவுகள் ஆற்றினர்.

அதன்மேல் இசை, நடனநிகழ்ச்சிகள் நடைபெற்றன. 'பெருமையின் அழிவும் தாழ்மையின்உயர்வும்" என்ற நாடகம்ஒன்றும் சிறப்பாக நடித்துக் காட்டப்பட்டது ஈற்றில், திரு. வீ. வீ. யோசெப்அவர்களின் நன்றியுரையுடனும், சிற்றுண்டிஉபசாரணையுடனும் விழாசுபமேமுடிவடைந்தது.

—இ. ஜெயராசா

# கருதினுல் ஸ்ரெபினக் ஆண்டகை பேசுகின்றூர்

— சா. பெ. —

(சென்றவாரத்தொடர்ச்சி)

நாம் சிறையிலிருந்தபோது சாகிறெப் மேற்றிராசன பொறுப்புகளை ஏற்றுக்கொண்ட லாச் மேற்றிராணியார் அண்மையில் நம்மைக்காண மும்முறை முயன்றும் தடைவிதிக்கப்பட்டார். நம்மைஅதிகமானோர் தரிசிக்கப்படாதென்பதுஆட்சியாளரின் கருத்தாயிருக்கலாம. நம்மைச் சந்திக்கவரும் வெளிநாட்டினர், குருமார், பத்திரிகாநிருபர்கள்ஆதியோர் ஒருயூகோசிலேவியபிரஜையின் சாதாரணவாழ்க்கைமுறையை உணர்ந்துகொள்ள மாட்டார்களென்றே நாம்கருதுகிறோம். வெளிநாட்டினர் இங்கே தங்கள்தூதுவாலயங்கள் அளிக்கும் பாதுகாப்புடன் வருகின்றனர். இந்நாட்டினூடாகச் சென்று மேலெழுந்தவாரியாகப் பார்த்துவிட்டுப் பின்னர் தங்கள்நாடு திரும்புகின்றனர். ஆனுல்,நாமோ இங்குதானே இறக்கும்வரை இருக்கவேண்டும்.

ரூஷியாவிலும், அதன்தோழநாடுகளிலும் திருச்சபையின்நிலை எவ்விதமோ, அதைவிட யூகோசிலேவியாவில் சிறப்பானதாய் இல்லைஎன்பதை மீட்டும்வற்புறுத்திக்கூற விரும்புகிறோம். அந்நாடுகளிற்போல இங்கு திருச்சபை சமாதிவைத்துப் பூட்டப்படவில்லையெனக் கூறும் அதேவேளையில் கத்தோலிக்கருக்காக அது திறக்கப்பட்டதாயுமில்லைஎன்றும் தெரிந்துகொள்வது அவசியம். இந்தநாடு ஒரு ஜனநாயக நாடென்றும், ஒவ்வொரு பிரசைக்கும் மதவழிபாட்டுச் சுதந்திரம் உண்டென்றும் ஆட்சியாளர்கூறுகின்றனர். அவ்வாறுயின்நாம் கோவில்செல்லும்போது அவர்கள் கண்காணிப்பதேன்? தமது சமயகடமைகளைப் பிரமாணிக்கமாக அனுசரிக்கும் கத்தோலிக்கரான அரசாங்கஅதிகாரிகள், ஆசிரியர்கள், வைத்தியர்கள், தொழிலாளிகள்மீதுமட்டும் ஏன் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன? கத்தோலிக்கரான பலயுவதிகள்மட்டும் சாகிறெப்நகர ஆசிரியபயிற்சிக் கலாசாலைகளிலிருந்து ஏன்நீக்கப்பட்டனர்? இதுதானு யூகோசிலேவியஅரசாங்கத்தின் சமயசுதந்திரம்?

இந்நாட்டின் குருமார்அனைவரும் அரசாங்கம் ஆரம்பித்துள்ள குருமார் சங்கத்தில் பலவந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். பெல்கிறேட்நகரில் நிகழ்ந்த ஆரம்பமகாநாட்டுக்குச் செல்லுமாறு அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டதை நாம்அறிவோம். அவர்கட்குப் போக்குவரத்துச்செலவும் கொடுக்கப்பட்டது.

கத்தோலிக்க சமயதலைவர்களுடன் அதிகாரிகள் எவ்விதம் நடந்துகொள்ளுகிறார்கள் என்பதைவிளக்கப் பின்வரும் சமபவங்கள் போதுமானவை. வியூபிலிஜினியாவின் மேற்றிராணியார் இந்த மகாநாட்டுக்கென்று புகையிரதத்தில் பிரயாணஞ்செய்தபோது இனந்தெரியாதசிலரால் தாக்கப்பட்டார். ஒருவன் அவர்மீது பெற்ருேலியம்ஊற்றினுன். இன்னெருவன் அவரது உடுப்பில் நெருப்பைப் பற்றவைத்தான். மிகமோசமாக நெருப்பில்வெந்தமையால் அவர் பலமாதகாலம் துன்பப்படவேண்டியதாயிற்று. மற்றொருமேற்றிராணியார் இரகசியப்போலீஸரால் 30 மணித்தியாலம் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டார். இவையெல்லாம் இந்நாட்டில் திருச்சபைக்கு விடுக்கப்படும் பயங்கரஅச்சுறுத்தல்களே.

பலஆலயங்களில் திருத்தவேலைகள் செய்வதற்கென அரசாங்கம் இலட்சக்கணக்கானரூபாக்களைச் செலவிட்டுள்ளது உண்மையே. ஆயின் அவைகளையெல்லாம் அரசாங்கம் கத்தோலிக்கர் மீது மிகப்பளுவான வரிகளைவிதித்து அறவிட்டது. எமது மக்களின் வேதவிசுவாசத்தை விழுத்தமுடியாதெனக் கண்டஅரசாங்கம் வரிப்பளுவை அதிகமாகச் சுமத்துவதன்மூலம் அவர்கள் சரணடையச்செய்ய முயல்கின்றது.

விசாரணைப்பங்குகளின் சொத்துக்கள்அனைத்தும் அபகரிக்கப்பட்டுள்ளன. குருமாரை அரசாங்கம் எவ்வளவாக நிர்ப்பந்திப்பினும் எமதுபங்குகளைச் சேர்ந்தோர் தங்கள்விசாரணைக்குருமாரைப் பசிபட்டினியால் மடிவதற்கு விட்டுவிடமாட்டார்கள்.

அரசாங்கம் ஆலயங்களைக்கட்ட அதிகபணம்செலவிடலாம். ஆயின் எமக்குவேண்டியது அழகான ஆலயங்கள் அல்ல. மத்தியநூற்றுண்டுகளிலே வேதகலாபனைகளின்போது நிலச்சுரங்கங்களில் திவ்வியபூசை நிறைவேறிவந்தது. எமக்குத்தேவைப்படுவது கத்தோலிக்க சமயவழிபாட்டுக்கும், கத்தோலிக்க கல்வி ஊட்டுவதற்கும் கட்டுப்பாடற்ற சுதந்திரமே.

ஒருபொதுக்குழுவை நியமித்து மற்றையமதங்களுடன் கத்தோலிக்க திருச்சபையை இணைத்துத் தேசிய சபைஒன்றை நிறுவ ஆட்சியாளர் முயற்சிக்கின்றனர். இதுபற்றி நாம் தீர்மானித்து முடிவுசெய்தற்கில்லை. ரோமிலுள்ள தலைமைப்பீடமே கத்தோலிக்கதிருச்சபையின் கொள்கைகளிலோ இலட்சியங்களிலோ திருத்தங்களைச்செய்ய அதிகாரமுடையது. பரிசுத்ததந்தையின் அனுமதியின்றி எமதுகொள்கைகளில் இம்மியளவுதானும் மாற்றத்தை எதிர்நோக்கமுடியாது.

கத்தோலிக்க சமயவழிபாடு, அரசாங்கதலையீடில்லாத கத்தோலிக்க திருமணங்கள், கத்தோலிக்க கல்வி, கத்தோலிக்கஅச்சுப்பிரசுரம் இவற்றில் எமக்குச்சுதந்திரம் தேவை. கடந்த காலத்தில் இவற்றை நாம்வற்புறுத்தியதுபோல மீண்டும்எமதுமரணம்வரை வற்புறுத்தியே தீருவோம். நாம் இவ்விதம் வற்புறுத்துவதால் அதன் நோக்கம் அரசாங்கத்தை எதிர்க்கிறோம் என்பதல்ல. நாம் கத்தோலிக்கராயினும் நாம்யூகோசிலேவியர். ஏனைய சமயத்தவர்களிடையிலோ அன்றேல் சமயமற்றோரிடையோ நிலவும் தாய்நாட்டுப்பற்றிலும் கத்தோலிக்கராகும் எமதுபற்று எவ்விதத்திலும் குறைந்ததல்ல.

---

● அமெரிக்க சர்வதேச பூபௌதிக வருடதிட்டத்தில் கலந்துள்ள விஞ்ஞானிகள் 250மைல்அகலமும், 1,000அடி ஆழமுமான புதியகடல்நதிஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். சமுத்திரமட்டத்தின்கீழுள்ள இந்த'கடல்நதி' நீரோட்டம் பூமத்தியரேகையைஒட்டி மேற்கிலிருந்து கிழக்காக 2,500மைல் வரை ஓடுகின்றதாம்.

● கேரளஇராச்சியத்திலே ஜனதிபதிஆட்சி சென்ற23-ந்திகதியன்று நள்ளிரவு நீக்கப்பட்டு அவ்விராச்சிய பிரஜாசோஷலிஸ்ற் கட்சித்தலைவர் திரு. பட்டம்தாணுப்பிள்ளை முதன் மந்திரி பதவிஏற்றார். இவருக்குவயது 74. முன்புஇவர் திருவாங்கூர்இராச்சியத்தின் முதன்மந்திரியாகவும், கொச்சி– திருவாங்கூர்இராச்சியத்தின் முதன்மந்திரியாகவும் பதவிவகித்திருந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருதினால் எழுதிப்போன மரணசாதனம்

சமீபத்திலே காலஞ்சென்ற யூகோசிலேவிய கருதினால் ஸ்ரெபினக் ஆண்டவர் குரோத்தியாவின் முப்பதுலட்சம் கத்தோலிக்கருக்கும் அனுப்பிய ஈறுந்தசெய்தியிலே, "நமது முழுஇருதயத்தோடும் ஒவ்வொருவரையும் மன்னிக்கிறோம்; எந்தவிதத்திலாவது நாம் பிழைசெய்திருக்கக் கூடிய எவருமே நம்மை மன்னிக்க வேண்டுமெனக்கேட்டுக்கொள்ளுகிறோம்; குரோத்தியமக்களுக்குச் சேவைசெய்வதற்கே நமது வாணாள்முழுவதும் வருந்தியுழைத்தோம்; இப்போது நம்முடைய மரணவேளையிலே திருச்சபைக்கும், பரிசுத்தஸ்தானத்துக்கும் பிரமாணிக்கமாய் இருந்துவருமாறு அவர்களைக்கேட்டு, அவர்களின் இதயங்களுக்கு நம்மை ஒப்படைக்கின்றோம்" என்று தெரிவித்திருக்கின்றார்.

கிறக, அன்று திங்கட்கிழமை வத்திக்கானிலே வெளியிடப்பட்டுள்ள தமது ஆத்மீக மரணசாதனத்திலே கருதினால் ஸ்ரெபினக் ஆண்டவர் மரணபரியந்தமட்டும் திருச்சபைக்குப் பிரமாணிக்கமாய் நிலைத்திருக்குமாறு தமது ஞானமக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். 1957-ம் ஆண்டு வைகாசிமாதம்28-ந்திகதி எழுதப்பட்ட இந்தமரணசாதனமானது, "கத்தோலிக்க வேதவிசுவாசமாகிய திவ்வியபொக்கிஷத்தைக் காப்பாற்றுவதற்கு நமதுபிதாக்களும், முன்னோர்களும் பலநூற்றாண்டுகளாக நீரோட்டங்களும், ஆறுகளுமாக இரத்தத்தைச் சிந்தியிருக்கிறார்கள்" என்பதை அவரது சாகிறெப்நகர் மேற்றிராசன மக்களுக்கு ஞாபகப்படுத்துகின்றது.

"யுத்தமோ அன்றேல் சமாதானமோ, நல்ல திர்ஷ்டமோ அல்லது துரதிர்ஷ்டமோ எதுவுமே தனது பிரதமமேய்ப்பராகப் பேதுருவானவரின் பதிலாளியைக் கொண்டுள்ள கிறீஸ்துநாதருடைய திருச்சபைக்கு மரணபரியந்தம்மட்டும் பிரமாணிக்கமாய் நிலைத்திருக்க நாம்கொண்டுள்ள திடநிர்ணயத்தை அசைக்காதிருக்கவேண்டும்.

"யூகோசிலேவியாவின் கம்யூனிஸ்த அரசாங்கம் தேவதாயாருக்கு விரோதமாகத் தேவதூஷணங்களை —ஒருஎழுத்திலே நமது தாய்நாட்டிலிருந்து திருச்சபையை ஒழித்துவிடலாமென நம்பித் தான்நடத்திய அந்தப்பெயர்பெற்ற விசாரணையின்போது நாம்கண்டனஞ்செய்த தேவதூஷணங்களைப் பாடசாலைப்புத்தகங்களிலே புகுத்திவிடக்கூடியதாய் இருந்தது.

"அவர்கள் நம்மத்தியிலே நாஸ்திகர்களை இடையில் செலுத்திவிட்டார்கள். இவர்கள் நாம் எழுதுவதுபோல் இரண்டுசதவிகிதமான சிறுபான்மையினராயிருந்தும் உங்கள் ஆத்துமங்களிலிருந்து கடவுளின்திருநாமத்தை எடுத்துவிட்டு உங்களைப் பாக்கியவாளராகச்செய்ய — அதாவது கடவுள்இல்லாமலே உங்களைப் பாக்கியவாளராகச்செய்யத் தங்களால் கூடியதெல்லாம் செய்தார்கள். கடவுள்இல்லாமல் ஒருநாட்டின்கலாசாரத்தையும், நாகரீகத்தையும், நல்வாழ்வையும் உருவாக்குவதுஎன்பது எக்காலத்துமே அதனுடையஅழிவில் முத்திரை பதிப்பதையே கருதும்." இவ்வாறெல்லாம் கருதினால்ஆண்டவர் தமது மரணசாதனத்தில் எழுதியிருக்கின்றார்.

## பொதுச் சங்கத்துக்குத் தம்மை அர்ப்பணஞ் செய்கின்றார்

திருச்சபைப் பொதுச்சங்கத்துக்குத் தமது தாழ்மையான வாழ்க்கையைத் தாம்அர்ப்பணஞ் செய்திருப்பதாக அருளப்பபாப்பரசர் சமீபத்திலே தெரிவித்திருக்கின்றார். சுத்திகரத்திருநாளன்று பாரம்பரியமான மெழுகுவர்த்திகளின் காணிக்கையைத் தம்மிடம் கொண்டுவந்த குருசிரேஷ்டர்களிடமே அவர் இவ்விதம் கூறலாயினர். அன்றுகாலை திவ்வியபூசையிலே இவ்வாறு தம்மை அர்ப்பணஞ்செய்ததாக அவர்தெரிவித்து, அன்றுதினம் தமக்குக்கொடுபட்ட மெழுகுவர்த்திகளை உலகின்பிரதம திருசேத்திரங்களுக்குத் தாம் அனுப்ப இருப்பதாகக் கூறினார்.

"திருச்சபைப் பொதுச்சங்கத்தின் ஆயத்தமும், வருகையும் ஒவ்வோர் ஆத்துமத்திலும் ஒருசமனசானவரின் பாதையைப் போன்று தங்கள் அடையாளத்தை இட்டுப்போகும்படியாய்ச் செபத்திலே பாப்பானவருடன் சேர்ந்துகொள்ளுமாறுஒவ்வோர் சாதியையும்சேர்ந்த— ஒவ்வோர் பாஷையையும் பேசுகின்ற விசுவாசிகளுக்குச் செய்யும் ஓர்விண்ணப்பமாக அவைகள் சேவை செய்யவேண்டும்" என்றே நாம் இதைச் செய்கிறோமென அவர் கூறலாயினர்.

"சக்திகளைத் தூண்டியெழுப்புவதும், பிறர்சிநேகசுவாலையைப் பரவச்செய்வதும், மங்கையினதும், மேய்ப்பனினதும் ஐக்கியத்திலே பரிசுத்தமும், பொதுவும், அப்போஸ்தலத்துவமுமான திருச்சபைக்குக் கிறீஸ்துநாதர் ஆசித்த உந்நதங்களுக்கு அதனை உயர்த்துவதுமே பொதுச்சங்கத்தின் விளைவாயிருக்கு"மென்று பாப்பரசர் நம்புகிறார்.

—(⌣)—

## உத்தரப்பிரதேஷ் கவர்னரும் கத்தோலிக்க மிஷனரிமாரும்

இந்தியாவிலே உத்தரப்பிரதேஷ் இராச்சியத்தில் கத்தோலிக்க மிஷனரிமார் ஆற்றிவரும் மேன்மைவாய்ந்த தற்பரித்தியாக தொண்டுகளுக்கெல்லாம் அவ்விராச்சிய கவர்னரான மாட்சிமை தங்கிய வி. வி. கிரிஅவர்கள் அன்று பகிரங்கமாகச் சிறந்த பாராட்டுரை வழங்கலாயினர். லக்னோநகரிலே கத்தோலிக்கமக்களால் பம்பாய்நகர் அதிமேற்றிராணியாரான கருதினால் வலேரியன் கிருஸியாஸ் ஆண்டவருக்கு அளிக்கப்பட்ட பகிரங்கவரவேற்பில் பேசியபோதுதான் இப்பாராட்டுரை வழங்கப்படலாயிற்று.

கவர்னர்அவர்கள் தமதுபேச்சில் குறிப்பிட்டதாவது: "இந்த இராச்சிய மக்கள்சார்பாகக் கருதினால் ஆண்டகையை வரவேற்க நாம் மகிழ்ச்சியடைகின்றோம். அவர்உலகமுழுவதிலுமே இன்று கீர்த்திபெற்று விளங்குகிறார். தம்முடைய மகத்தான பணியாலும், கலைவன்மையாலும், தமதுகொள்கைகள்மட்டில் கொண்டுள்ள கடைப்பிடியான நம்பிக்கையாலும் அவர்தம்மை ஓர்பெரியராக்கிக் கொண்டார்.

"சமூகஸ்தாபனங்கள், கல்விஸ்தாபனங்கள்மூலமாக மக்களுக்கு மிஷனரிமார்களால் செய்யப்பெற்றுவரும் மகத்தானசேவைகளைப் புகழ்ந்து பாராட்டாதிருக்கமுடியாது. மிஷன்பாடசாலைகள் இளைஞர்களையும், பிள்ளைகளையும் நேர்மையாய் நடந்துகொள்ளவும், ஒழுங்குமுறையோடும், தைரியத்தோடும் தேசத்துக்குச் சேவைபுரியவும் பயிற்றுகின்றன. மிஷனரியகல்விஸ்தாபனங்களிலேயே நமதுபிள்ளைகள், பேரப்பிள்ளைகளெல்லோரும் கல்வி பயின்றார்கள். ஆகவே, அவர்களிலிருந்து இதனைநமதுசொந்த அனுபவத்தில் கண்டறிந்திருக்கிறோம்."

—※—

## பழைய செபமாலைகளும் குடும்ப செபமாலையும்

குடும்பசெபமாலைப் படையணியின் ஸ்தாபகரும், தளகர்த்தருமான வண. பற்றிக் பெய்ற்றன் சுவாமிகள் ஐக்கியஅமெரிக்க தேசமுழுவதிற்கும் விடுத்துள்ள ஓர்வேண்டுகோளிலேபழுதடைந்தவைகளும், பழையனவுமான செபமாலைகளைத்தமக்குஅனுப்பிவைக்கும்படி கேட்டிருக்கின்றார். இந்தச்செபமாலைகள் பழுதுபார்க்கப்பட்டுச் சுவாமிகளின் பிரமாண்டமான தென்னமெரிக்க குடும்பசெபமாலை அணிவகுப்புகளின்போது இலவசமாக வழங்கப்படும்.

ஸ்பெயினிலே அவரால் தயாரிக்கப்பெற்ற செபமாலைக் கலர்ச் சினிமாப்படங்களைப் பார்க்கின்ற தென்னமெரிக்க மக்களிடமிருந்து செபமாலைகள்கேட்டுப் பல்லாயிரக்கணக்கானமனுக்கள் வந்துகொண்டிருப்பதாலே "தென்னமெரிக்காவுக்குச் செபமாலைகள்" என்ற ஓர் இயக்கம் ஐக்கியஅமெரிக்கதேசத்தில் பரந்திருக்கிறது. நியூயோக்நகரிலுள்ள குடும்பசெபமாலைத் தலைமைஸ்தாபனத்துக்கு அனுப்பப்படும் பழுதடைந்த செபமாலைகளும், பழையசெபமாலைகளும் சம்பளமின்றி வேலைசெய்யும் தொண்டர்களால் பழுதுபார்க்கப்படுகின்றன. திருமதி எம்மா லோண்ட்றி எனும்மாதும், 2-வது உலகயுத்தத்திலே காயமடைந்து இருகால்களும் துண்டிக்கப்பட்டுள்ள அவரின்புதல்வர் கிளிபோட்டும் பழுதுபார்க்கும் வேலைகளை மேற்பார்வையிடுகின்றனர்.

வெளிநாடுகளிலுள்ள மிஷனரிமார்களுக்கு இலவசமாகச் செபமாலைகள் வழங்குவதாகிய பெய்ற்றன்சுவாமிகளின் திட்டத்திற்கென்று இவ்விருவரும் இதுவரை 25,000 செபமாலைகள் கட்டிக் கொடுத்திருக்கின்றனர். இத்திட்டத்தின்மூலம் இன்றுவரை பத்துலட்சத்துக்குமேற்பட்ட செபமாலைகள் பலருக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன.

## வத்திக்கான் நூல்நிலைய சேவை

வத்திக்கான் நூல்நிலையம் சென்ற 1959-ம்ஆண்டிலே உலகமுழுவதிலுமிருந்துபோன ஆயிரக்கணக்கான பண்டிதர்களுக்குச் சேவையாற்றியிருக்கிறது. இந்தநூல்நிலையம் 60,000கையெழுத்துநூல்கள் 7,00,000 புத்தகங்களுக்குமேல் கொண்டிருக்கிறது. ஆராய்ச்சிவேலைசெய்கிறநிபுணர்கள் மாதக்கணக்கிலே அன்றேல் வருடக்கணக்கிலே இதில்செலவிடலாம். இவர்கள் வேலைசெய்வதற்கு வேண்டிய இடவசதி கொடுபடுகிறது. அத்துடன் நூல்நிலைய உதவியாளர்கள் அவர்களுக்குத் துணைசெய்கிறார்கள். சென்றவருடத்திலே இந்தநூல்நிலையத்தில் புதிதாக 30கையெழுத்துநூல்களும், 4,200 அச்சேற்றியநூல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. அங்கு பிரதிமைப்படம் பிடிக்கும் பகுதி சென்றவருடம் 4,410 விஷயங்களை 2,41,213 பிரதிமைப்படம் பிடித்திருக்கிறது. இந்தவிஷயங்கள் ஒருபக்கத்தையோ அன்றேல் நூற்றுக்கணக்கான பக்கங்களையோ அடக்கியனவாகும். உலகமுழுவதிலுமுள்ள பண்டிதர்களினதும், நூல்நிலையங்களினதும் கேள்வியின்பேரிலே இவைகள் பிரதிமைப்படம் பிடிக்கப்பட்டன.

● வத்திக்கான் தபாற்கந்தோர் சென்றமார்கழிமாதம் 14-ந்திகதியன்று பாவனைக்குவிடுத்த ஐந்து இனமான புதிய தபால் முத்திரைகள் முறையே 15, 20, 60 லீறாநாணயங்கள் பெறுமதியுடையனவாய் இறப்பாயேல் எனும் பிரபல சைத்திரிகர் தீட்டிய "கிறீஸ்துநாதரின் பிறப்பு" என்ற படத்தின் சாயலைக் கொண்டுள்ளனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**பங்குனி—1960**

ஞா. 13 தபசுகால இரண்டாம் ஞாயிறு 1-ம் வகுப்பு. (ஊ)
திங். 14 காலதினம் (ஊ)
செ. 15 காலதினம் (ஊ)
பு. 16 காலதினம் (ஊ)
வி. 17 அர்ச். பத்திரிசியார் — காலதினம் (வெ/ஊ)
வெ. 18 அர்ச். சிறிலப்பர் — காலதினம் (வெ/ஊ)
சனி 19 தேவமாதாவின் பத்தாவும், திருச்சபையின் பாதுகாவலருமான அர்ச். சூசையப்பர் 1-ம் வகுப்பு (வெ)

சத்திய வேத
# பாதுகாவலன்
1960-ம் ஆண்டு
பங்குனிமாதம் 10-ந் திகதி



## மேற்றிராணியாண்டவரின் திருமுகம்

யேசுக்கிறீஸ்துநாதரில் நமது அன்பான குருப்பிரசாதிகளே! அருமையான பிள்ளைகளே!

நாம் மிகமுக்கியமான ஒருவிஷயம்பற்றியே இன்றுஉங்களுக்கு எழுதுகிறோம். எமதுநாட்டின் சட்டமகாசபையாகிய பாராளுமன்றத்திற்கு எமது பிரதிநிதிகளான அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதானது, எம்மெல்லோருக்கும் பாரதூரமானவிளைவை உண்டுபண்ணுவதாகிய ஒருகாரியமாகும். சர்வேசுரனுடைய பிள்ளைகளும், நாட்டின் உண்மைத்தேசாபிமானிகளும் என்றமட்டிலே, தேவகற்பனைகளின் பிரகாரம் நடக்கக்கூடியவர்களும், எல்லாவிதத்திலும் நாம் அருமையாக மதிக்கின்ற திருச்சபைக்கும், எமதுநாட்டிற்கும், எமதுகுடும்பத்திற்கும், எமதுபிள்ளைகளுக்கும் நீதியானகாரியத்தைச் செய்யக்கூடியவர்களுமான பேர்களையே பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைக்க எம்மால்இயன்றமட்டும் ஆனதெல்லாம்செய்வது எமது கடமையாகும். அதனால்தான் எவ்வித அசௌகரியங்கள் ஏற்பட்டபோதிலும், வாக்களிப்புநிலையத்திற்குப் பிரயாணஞ்செய்ய அவசியம்நேர்ந்து, சொந்தப் பணத்தையே செலவிடவேண்டிவந்தபோதிலும் அவற்றைப்பறுவாய்பண்ணதுபோய் உங்கள் வாக்குரிமையை வழங்கவேண்டுமென்றே உங்கள்எல்லோரையும் மூந்தமுந்த நாம்கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம். ஆகவே,வாக்குரிமையை வழங்கப்போவோம், வாக்குரிமையை வழங்குவோம், எமது மனச்சாட்சிச்சுதந்திரத்தை அனுபவித்து, எமது உடன்மனிதருடன் சமாதானமாய்ச்சீவிக்க உதவிபுரியக்கூடிய ஒருவருக்கேஅந்த வாக்குரிமையை வழங்குவோம்என்பதே நமது நோக்கமாய் இருக்கவேண்டும்.

இதுபோலும் முக்கியமான ஒரு காரியத்திலே சர்வேசுரனால் நாம் வழிநடத்தப்படவேண்டியது அத்துணை ஆவசியகமாகையால் இன்றுமுதல் 19-ந் திகதிவரை எஞ்சியிருக்கும் நாட்களை நாம் இதேகருத்துக்காகப் பக்திவேகமாய்ச் செபஞ்செய்வதிலும், தினமும் பரித்தியாகமுயற்சிகள் செய்து ஒப்புக்கொடுப்பதிலும் செலவிடுவோமாக! பொதுத்தேர்தல் நடைபெறும்தினம் நமது பரிசுத்தமாதாவாகிய திருச்சபையின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பரின்திருநாளாய் இருக்கின்றது. ஆகவே, எமதுபாதுகாவலரது பாதுகாப்பின்கீழ் அந்நாளில் நாம்அடையும் முடிவை ஒப்படைக்க ஒருவிசேஷ நியாயம் எமக்குஇருக்கின்றது.

அதனால் புதியமந்திரிசபை ஆக்கப்படுகிறவரை நாமெல்லாம் ஒன்றுசேர்ந்து செபஞ்செய்வோமாக! அந்நாட்களிலே அநேகம்சிறிய பரித்தியாகமுயற்சிகளைச்செய்து சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுப்போமாக! பொதுத்தேர்தலை முன்னிட்டு எமதுமேற்றிராசன முழுவதிலும் குறித்தநாட்களிலே அனுசரிக்கப்படவேண்டியவைகள் பின்வருமாறு:

(1) தினமும் திவ்வியபூசைவேளை "அர்ச். சூசையப்பரே, எங்கள்ஆபத்துக்களில் உம்மண்டைஓடிவருகிறோம்"என்ற அர்ச். சூசையப்பரின்செபம் சொல்லப்படும்.

(2) 13-ந்திகதிமுதல் தினமும் இதேகருத்துக்காகப் பங்குக்குரவரால் குறிக்கப்படும் நேரத்தில் திருமணித்தியாலம் நடைபெறும்.

(3) நமதுபாடசாலைகளிலெல்லாம் இதேகருத்துக்காகப் பிள்ளைகள் தினமும் செபமாலைசொல்லுவார்கள்.

(4) 19-ந்திகதிமட்டுமல்ல, ஆனல், புதியமந்திரிசபை ஆக்கப்படுகிறவரை நல்வழிநடத்துமாறு திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவரைமன்றாடி, "Ad Postulandam Gratiam Sancti Spiritus"என்ற கடமைச்செபம் பூசைவேளை தொடர்ந்து சொல்லப்படும்.

சர்வேசுரனுடைய பிள்ளைகளாகச்சீவிக்கநமக்குப்படிப்பித்தருளிய எமதுஆண்டவரின்அடிச்சுவடுகளைப் பின்பற்றுகின்ற கத்தோலிக்கராகியநாம் எமதுநாட்டிற்குக் கூடியமட்டும்அதிகம்சிறந்தஓர்அரசாங்கத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு எம்மால்இயன்றதெல்லாம் செய்வோமாக!

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கிறீஸ்துநாதரிலும்,அமலோற்பவ மரியநாயகியிலும்
உங்கள் நேசபற்றுதலுள்ள
✠ ஜே. எமிலியானுஸ்பிள்ளை O.M.I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்.

### பண்டாரநாயகா கொலைவழக்கு

பண்டாரநாயகாகொலைவழக்கு நேற்றுப் புதன் கிழமையோடு 55-வது தினத்தை அடைந்துவிட்டது. இப்போது 87-வது சாட்சியாக நாவலாசிரியர் பியதாசா மலல்கொடை விசாரணை செய்யப்பட்டு வருகிறார். இவர் சென்ற வெள்ளிக்கிழமை அளித்த சாட்சியிலே, "பிரதமர் கொல்லப்படவேண்டு"மென்று திருமதி விமலா விஜயவர்த்தனவும், முதலாம் எதிரியான புத்தரகித்ததேரோவும் திருமதி விமலாவீட்டில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் கூறியதாகத் தெரிவித்திருக்கின்றார்.

## அடைக்கலமாதாகோவிலில் சதாசகாயமாதாவின் 400-ம் நோவனையும் மகாஞான வொடுக்கமும்

யாழ்ப்பாணம் பரிசுத்தஅடைக்கலமாதா கோவிலிலே தபசுகாலத்தில் நடந்தேறும்வருடாந்தஞானவொடுக்கமானது சதாசகாயமாதாவின் 400-ம் நோவனைக் கொண்டாட்டத்தைமுன்னிட்டுச் சென்ற18-2-60 வியாழக்கிழமை ஆரம்பமாகி 24-ந்திகதிபுதன் கிழமை சதாசகாயமாதாவின் திருச்சுரூப ஊர்வலத்துடன் சிறப்பாகமுடிவாயிற்று.

அவ்வாரம் எம்மனோர்க்கு மனோகரமானஓர்வாரமாய், வரப்பிரசாத வெள்ளம பெருக்கெடுத்தோடும் ஒரு அருட்பிரசாதவாரமாய், அனைவரையும் பரலோகசிந்தனையில் இலயிக்கச்செய்த ஆன்மஇலட்சியவாரமாய் இருந்தது. ஞானவொடுக்க போதகர்களான மிகவண. எச். லெக்குத்தூர், வண. எல். ஜே. அகஸ்ரீன், வண. எஸ். பீற்றர், வண. எஸ். ஏ ஞானப்பிரகாசம், வண. பி. ஈ. அல்பிறெட், வண. பி. தியோகுப்பிள்ளை, வண. பி. சூசைப்பிள்ளை ஆதியாம்குரவர்கட்கு எமதுதாழ்மையான நன்றியைச் சமர்ப்பிக்க வேண்டியவர்களாகிறோம். தேர்ந்தெடுக்கப்பட்ட குரவர்கள்பலரும் பற்பலநோக்கங்களுடன் செய்தபோதனைகள் உள்ளபடியே எமது உளங்களைச் சலிக்க இளைக்கப் பண்ணது தொடர்ந்து புத்துணர்ச்சிகளைப் பிறப்பித்து நல்லஞானவொடுக்கம் செய்யத் தூண்டிவிட்டன. விசேஷமாய் இளைஞர்கட்கும், சமுசாரிகட்கும் அவரவர்அந்தஸ்துக்குரியகடமைகள் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டமை அதிகம்கவர்ச்சிக்குரியதாய் இருந்தது.

இப்புதுமுறையை எமதுமேற்றிராசனத்திலே முதன்முதல்இயங்கச்செய்து மக்களின் அமோகவரவேற்பைப் பெற்ற பெருமை எமதுபங்குக்குரவர் வண. எஸ். ஏ. சுவாம்பிள்ளைசுவாமியவர்கட்கே உரியது. ஒவ்வொருதினமும் விவிதமுறையான நிகழ்ச்சிகள் இடம்பெற்று மக்களின் இதயங்களைத் தட்டி அருட்டியமுறையும் மற்றோர் நல்லமுறையாகும்.

இறுதிநாளுக்கு முதல்நாளாகிய 23-ந்திகதிசாயந்தரம் வண. ஈ. பொமிக்கோசுவாமியவர்களால் வண. ஜோண் சிங்காரயர், வண. பெனற் சொன்ஸ்ரன்ரைன்குரவர்கள் துணைபுரிய மாலைஆராதனைபாடிச் சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்பட்டது. மறுநாள் 24-ந்திகதி புதன்கிழமை பொழுதுபுலர்ந்து கோவில்மணிகள் ஆர்ப்பரிக்கவே பக்தர்குழாம் பெருந்திரளாகக் கோவிலில் ஒன்றுகூடியது. வண. பங்குக்குரவர் பாடற்பூசைநிறைவேற்றினர். பெருந்தொகையானோர் தெய்வீகவிருந்தருந்தினர்.

சாயந்தரம் கோவில்மணிகள் நாதகீதஞ்செய்ய மக்கள்குழாம் அக்களிப்புடன் திரண்டுவந்து கோவிலின்உள்ளும்புறமுந்தேங்கிற்று. பாடசாலைச் சிறுவர்சிறுமிகள் அணிவகுத்துச் செபமாலைசொல்லி முன்செல்ல, பக்தர் பின்தொடர, பாடகர்குழாம் ஒலிபெருக்கியைத் துணைக்கொண்டு தேவதாயாரைப் பாவாலும்நாவாலும் போற்றித்துதிக்க, சதாசகாயமாதா பெரியஊர்வலமாக மகரதோரணங்களாலும், பன்னிறத்துவசங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த வீதியூடே எழுந்தருளி ஆசீர்வாதமழை பொழிந்து, கோவில்முன்றிலை அடைந்து அங்கே நவமாய்அமைக்கப்பட்டு மின்சாரதீபங்கள்பிரபைவீசிய சிங்காரபீடத்திலே மக்களின் வேண்டுகோள்களுக்குச் செவிசாய்க்குமாறு அமர்ந்தார்.

அத்தருணம் எமதுபங்குக்குரவர் சதாசகாயமாதாவின் 400-ம்நோவனைப்பத்திமுயற்சியை ஆரம்பித்தார். வண. பி. சூசைப்பிள்ளை சுவாமியவர்கள்எழுந்து இப்பங்குக்கிறீஸ்தவர்கள் மனஞ்சலியாது கடந்தஎட்டுவருடங்களாக இந்தநோவனைப்பத்திமுயற்சியைப் பகிரங்கமாக நடத்திவந்ததைப் பாராட்டி, மனஞ்சலியாது நம்பிக்கையுடன்கேட்கும் வேண்டுகோள்களைத் தொடர்ந்துகேட்டுவந்தால் இரக்கமுள்ளதாயார் பெற்றுத்தருவாரென்று கல்லுமேகரையத்தக்கவாறு செய்த கனிந்தபிரசங்கம் இன்றுமே எமது செவிகளில் தொனிக்கின்றது.

ஈற்றில், பங்குக்குரவர் ஞானவொடுக்கத்தையும், நோவனையையும்நடாத்த ஊக்கமளித்த மக்கட்குநன்றிகூறினர். அத்துடன் இப்பெருவிழா வெற்றிகரமாய் நடந்தேறச்செய்து, அகால மழையினுல் சுற்றுப்பிரகாரம் தடைப்படாது சிறப்பாய்நடைபெறவைத்த சதாசகாயமாதாவுக்கும் நன்றிகூறியதோடு விழா இனிதேமுடிபெய்தியது.

A. S.

### எதிரிகளுக்கு மரணதண்டனை

குருநாகல் சுப்பிறீங்கோட்டிலே பொலன்னறுவை வகுப்புக் கலவர வழக்கு பத்தொன்பது தினங்களாக விசாரணை செய்யப்பட்டு முடிவில் 27 எதிரிகளிலும் 18 பேர் விடுதலையடைய, ஏனைய 9 எதிரிகளுக்கும் சென்ற வெள்ளிக்கிழமை மரணதண்டனை விதிக்கப்படலாயிற்று. அசைஸ் கம்மிஷனர் ஏள் விஜயவர்த்தன நீதியரசரே வழக்கை விசாரணைசெய்தார். இவ்வழக்கிலே 1958-ம் ஆண்டு வைகாசிமாதம்நடந்த வகுப்புக்கலவரத்தின்போது பொலன்னறுவை நீர்ப்பாசனபகுதியைச்சேர்ந்த திரு. லியோ பெர்ணண்டோ, திரு. அனெஸ்லி மெண்டிஸ்எனும்இருவரையும் கிரியத்தலைஎனுமிடத்தில் கொலைசெய்ததாகவும், சட்டவிரோதமாகக் கூட்டங்கூடித் தீங்கிழைத்ததாகவும் தியபெதும எனுமிடத்தைச்சேர்ந்த 27பேரும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார்கள்.

### வேலையற்றிருக்கும் மாணவர்கள்

இலங்கையிலே தற்போது வேலையற்றிருப்போரின் தொகை 1 லட்சத்து 25 ஆயிரவருக்கு மேலாகும். இவர்களில் ஜே. எஸ். சி. – எஸ். எஸ். சி. படித்துவிட்டு வேலையற்றிருப்போரின் தொகை ஏறக்குறைய நாற்பதினுயிரம் பேராகும். எஸ். எஸ். சி. படித்துவிட்டு வேலையில்லாதிருக்கும் இருபதினுயிரம்பேரில் அநேகர் ஆங்கிலத்தைப் பொதுப்பாடமாகக் கொண்டு இருமொழிப் போதனைகளில் சித்தியடைந்தவர்கள். இவர்களெல்லாம் உடலுழைப்பை விரும்பாது உத்தியோகங்களையே விரும்புகின்றார்களாம்.

### முதலாவது நீகிறோசாதிக் கருதினல்

நிகழும் பங்குனிமாதம் 28-ந் திகதியன்று ஏழு புதிய கருதினல்மாரை நியமனஞ் செய்யப்போவதாக அருளப்ப பாப்பரசர் சென்ற 4-ந் திகதி அறிவித்திருக்கிறாரென வத்திக்கானிலிருந்து தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. அதனால் திருச்சபைக் கருதினல்மாரின்தொகை மேலும்அதிகரித்து 88 பேராகும். புதிய கருதினல்மாரில் முதன்முதலாக ஒருநீகிறோவர்—அதாவது காப்பிரிச்சாதியினரும் இருப்பார். இவர் ஆபிரிக்காவிலே தங்கனைகா நாட்டைச்சேர்ந்த ருடாபோநகர லோறியன் ருகம்ப்வா மேற்றிராணியாரே. ஏனைய புதிய கருதினல்மாரில் ஜப்பானின் தலைப்பட்டணமாகிய ரோக்கியோநகரின் எம். பீற்றர் ராட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

பாராளுமன்றப்பொதுத்தேர்தலை முன்னிட்டு இம்மாதம் 17-ம், 18-ந் திகதிகளில் எல்லாப்பாடசாலைகளும் மூடப்படவேண்டுமென வித்தியாதிபதி தெரிவித்திருக்கின்றார்.

தேர்தல் உத்தியோகத்தருக்குத் தங்களாலான எல்லா உதவிகளையும் செய்யுமாறு தலைமை ஆசிரியர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

J. Brohan, O. M. I.,
Actg. G. M. of R. C. School's.

Jaffna 7-3-60.

## பங்குனி 22 செவ்வாய் — 1960 —

யாழ்ப்பாணம் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதாவின் ஆசனக் கோவிலிலே

**வண. ஜே. எவ். சேவியர்,** O. M. I. சுவாமியவர்களதும்,
**வண. வலென்ரின் உக்தின்,** O. M. I. சுவாமியவர்களதும்
குருத்துவ தங்கயூபிலி விழாக் கொண்டாட்டம்.

காலை 7 மணிக்கு வண. வி. உக்தின் சுவாமியவர்கள் பெரியபாடற்பூசை நிறைவேற்றுவார்.

இலங்கையிலுள்ள அமலோற்பவ மரியநாயகிசபைக் குருமாரின் சிரேஷ்டரான மகாவண. அலெக்ஸ் செறு சுவாமியவர்கள் பிரசங்கம்செய்வார்.

* * *

யூபிலி நாயகர்களான குருப்பிரசாதிகள் இருவரும் சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்தும் இந்த மகத்தானநாளிலே அவர்கள் பங்குக்குருமாராயிருந்த விசாரணைப் பங்குகளைச்சேர்ந்த கிறீஸ்தவர்கள் அவர்களுடன் சேர்ந்துகொள்ளுமாறு அன்பாகக் கேட்கப்படுகின்றார்கள். கூடுமானல் ஆசனக் கோவிலில் நிறைவேறும் பெரிய பாடற்பூசைக்கு 22-ந் திகதியன்று நேர்முகமாகச் சமுகமளிப்பார்களாக.

## சத்தியவேத பாதுகாவலன்
**சந்தா விபரம்**

வருட சந்தா

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா | 5-50 |
| வெளி நாடுகள் | ,, | 6-00 |
| தனிப்பிரதி | சதம் | 10 |

| | ரூ. | ச. |
|---|---|---|
| நன்றியறிந்த ஸ்தோத்திரம் ... | 2- | 00 |
| மரணஞாபகம் ஒருஅங். ... | 2- | 00 |
| ஓடர்நிசி ( Order Nisi ) இருமுறைக்கு ... | 6- | 00 |

மற்றும் விபரங்களுக்குக் கடிதமூலமாகவோ அன்றேல் நேரிலோ மனுப்பண்ணிக் கொள்ளவும்.

**மனேஜர்,**
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

## திருத்தொண்டன்
**சந்தா விபரம்**

| | | ரூ. ச. |
|---|---|---|
| 1. | வருடசந்தா (தபாற் செலவு உட்பட) இலங்கை | 3-00 |
| 2. | வருடசந்தா (தபாற் செலவு உட்பட) வெளி நாடுகள் | 3-50 |
| 3. | தனிப்பிரதி (தபாற் செலவுடன்) இலங்கை | -30 |
| 4. | தனிப்பிரதி (தபாற் செலவுடன்) வெளி நாடுகள் | -35 |

சைடுய் அதிமேற்றிராணியாரும், பிலிப்பைன்ஸின் தலைப்பட்டணமாகிய மனிலாநகரின் எம். ரூபினோ ஜே. சந்தோஸ் அதிமேற்றிராணியாரும் அடங்குவார்கள்.

## சென் வின்சென்ற் டீ போல் தருமசபை

மேற்படிசங்கத்தின் கால்வருடப் பொதுக்கூட்டம் அடுத்துவரும் பங்குனி மாதம் 13-ந்திகதி ஞாயிறுவாரம் பி. ப. 5-30 மணியளவில் சஞ்சுசையப்பர் பங்கிச்சாலையில் நடைபெறும். வண. பென்னென்ற் கொன்ஸ்ரன்ரயின் சுவாமியவர்கள் உபந்நியாசம் செய்வார்.

A. S. Francis OF Mary,
தனிச்சங்க•காரியதரிசி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## வத்திக்கான் இராச்சிய......

பதிலாளியாக இருந்துவருகின்றார்.

இனி பாப்பானவரின் மும்மடிக் கிரீடங்களைக் கவனிப்போம். மகா ஆடம்பரமான திருவைபவங்களின்போதுமாத்திரம் அவர் தரித்துக்கொள்ளுகின்ற பெயர்பெற்ற மும்மடிக்கிரீடம் அவருக்குள்ள மிகமேலான அதிகாரத்தைக் குறிக்கின்றது. இந்தக்கிரீடம் மேற்றிராணிமாரால் அணியப்படும் விருத்தமானமுடியின் அடிப்புறவடிவத்திலே தங்கவஸ்திரங்கொண்டு செய்யப்பட்டதும், வளையாமல் உறுதியாயிருப்பதுமான ஓர் ஆதாரத்தைக் கொண்டிருக்கிறது. இதன்மேல் மூன்று தங்கமுடிகள் ஒன்றின்மீதொன்ருகப் பொருத்தப்பட்டிருக்கின்றன. கிரீடம்முழுவதும் முத்துகளாலும், விலையேறப்பெற்ற நவரத்தினங்களாலும் அலங்கரித்து அழகுபடுத்தப்பட்டிருக்கின்றது. கிரீடத்தின்மேல் அதிகம்சிறிய ஓர்உருண்டையும், இதன்மேல் ஓர்சிலுவையும் இருக்கின்றன.

புதிதாகத் தெரிவுசெய்யப்பெற்ற பாப்பானவருக்குக் கருதினல் தியாக்கோன்ஆண்டவர் திருமுடிசூட்டும்போது "இந்தமும்மடிக் கிரீடத்தை ஏற்றுக்கொள்வீராக! தாம் இளவரசர்களினதும், அரசர்களினதும்பிதாவும், இந்த உலகிலுள்ள விசுவாசிகளின் தலைவரும், யேசுக்கிறீஸ்துநாதரின் பதிலாளியுமாக இருக்கிறீரென்பதை அறிந்துகொள்வீராக"என்று சொல்லுகிற செபத்திலே இந்தமும்மடிக்கிரீடத்தின்அர்த்தம் விளக்கப்படுகிறது.

பல்வேறுகாலங்களிலே பாப்புமாருக்கு வெவ்வேருன மும்மடிக் கிரீடங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றில்சில ஸ்பானியதேச இசபெல்லா இராணியாராலே வழங்கப்பட்டதைப்போல் அற்பபெறுமதியுடையன. ஆனல்,மனதைவிட்டு ஒருபோதுமேமறக்கமுடியாத ஓர் முக்கிய சரித்திரசம்பவத்தை எடுத்துச்சொல்லிக்கொண்டிருக்கும் இந்தமும்மடிக்கிரீடம் இரண்டுடைம்நாணயங்கள்—அதாவது பத்துப்பென்ஸ் தானும் பெறுமதியுடையதன்று.

குறித்தசரித்திரசம்பவம் வருமாறு: 1799-மஆண்டு பிரான்ஸியகுடியரசின் தலைவர்கள் பாப்பரசின்நாடுகளைப் பறித்தெடுத்தபின் ரோமைநகரில் இருந்துவந்த தங்களுடையபடைகள் வத்திக்கானைக் கொள்ளையிடுமாறு விட்டுவிட்டார்கள். பாப்பரசரின்பொக்ஷசாலையிலுள்ள மிகப்பெரும்பாலான பொருள்கள் இருநூறுவருடங்களுக்குப் பிற்பட்டனவாய் இருந்து வருவதற்குக் காரணம்இதுதான்.

# சுவிசேஷ வியாக்கியானக் குறிப்புகள்

— B. W. J. —

### 4. சக்கரியாசின் காட்சி — லூ. I. 5-25.

**1.** ஏரோதின் நாட்களிலே (5) — லூக்கா சுவிசேஷ சம்பவங்களின் சரித்திர உண்மையைக் காட்டும்படியாக அவைகளை உலக சம்பவங்களோடு தொடுக்கிறார். ஏரோது ஒரு இடுமியனும், ரோமான் சக்கரவர்த்திக்குக் கீழ்ப்பட்ட அரசனும். ஆகையால், மெசியா வரமுதல செங்கோல் யூதாவை விட்டு நீங்கிவிடும் என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று (ஆதி. xlix. 10).

**2.** அபியா (5) — குரு வமிசமாகிய ஆரோனின் வமிசம் பெருகினதினால் எல்லாக் குருக்களுக்கும் முறை கொடுப்பதற்காகத் தாவீது இராசா அந்த வமிசத்தை 24 சேவைக் கூட்டங்களாகப் பிரித்தார். அவைகளுள் 8-வதுதான் அபியாவின் சேவைக்கூட்டம். பபிலோனிய அடிமைத்தனத்திற்குப்பின் ஆக நான்கு சேவைக்கூட்டங்கள்தான் யூதேயாவுக்குத் திரும்பிவந்தன. இவைகள் மறுபடியும் 24 சேவைக்கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அவைகளுக்கு அதே பெயர்கள் சூட்டப்பட்டன. ஒவ்வொரு சேவைக் கூட்டத்தாரும் ஒருகிழமைக்குத் தேவாலயத்தில் பணிவிடை செய்தார்கள்.

**3.** ஓர் குருப்பிரசாதி (5) — லூக்காவுக்கு ஒரு பலிப்பொருளாகிய காளைக்கன்று அடையாளம் (எசே. x. 14; காட். iv. 7). ஏனெனில், 1-வது அவர் யேசுநாதருடைய பலியைச் சுட்டிக்காட்டுகிற ஒரு குருப்பிரசாதியின் பலியோடு தமது சுவிசேஷத்தைத் தொடங்குகிறார். 2-வது அவர் யேசுநாதரைச் சகல மனிதருக்காகவும் பலியாக வந்த இரட்சகர் என்று தமது சுவிசேஷம் முழுவதிலும் விசேஷவிதமாய் விபரிக்கிறார்.

**4.** தூபங் கொடுக்கும்படி (9) — ஒவ்வொரு நாளும் ஐம்பதுக்கு மேற்பட்ட குருக்களுக்குள் இருவரைமாத்திரம் சீட்டுப்போட்டுத் தெரிவார்கள். ஒருவர் காலைப்பலி நேரத்திலும், மற்றவர் மாலைப்பலி நேரத்திலும் தேவாலயத்தில் பரிசுத்த தலம் என்ற நடு அறைக்குள் ஏழு கவற்கத்திசாலுக்கும், 12 காணிக்கை அப்பங்களின் மேசைக்கும் இடைநடுவில் இருக்கும் அடுத்தாரில் தூபங் கொடுப்பார். தூபங் கொடுக்கும் குருவுக்கு இரு குருக்கள் உதவிசெய்வார்கள். சுரவாத்தியம் தொனித்தவுடன் ஒருவர் தூப அடுத்தாரிலிருந்து சாம்பலை எடுத்துக்கொண்டு பின்னிட்டு நடந்து வெளியே போய்விடுவார். மற்றவர் புதிய தணல் கொண்டுவந்து தூப அடுத்தாரில் வைத்துவிட்டு அவரும் அப்படியே போய்விடுவார். வெளி அடுத்தாரில் பலிப்பொருள் வைக்கப்பட்டபின் மணிஅடித்தவுடன் தூபமும் கொடுக்கப்படும். இந்தத் தூபங் கொடுத்தலுக்கும், பெரியகுரு பிராயச்சித்தநாளில் தூபங் காட்டுதலுக்கும் இடையில் வெகு வித்தியாசம் உண்டு. பெரிய குரு அதிபரிசுத்த ஸ்தலத்தில் தூபங் காட்டி, உடன்படிக்கைப் பேழை இருந்தஇடத்தில் இருக்கும் கல்லின்மேல் 'துறிபிளை' வைப்பார்.

**5.** அருளப்பன் (13) — அல்லது யோண் என்பதற்குக் கருத்து, "தேவபிரசாதம்". சக்கரியாஸ் என்பதற்கு, "தேவனல் நினைவுகூரப்பட்டவர்". எலிசபேத் என்பதற்கு, "தேவனின் வாக்குத்தத்தம்". இந்த மூன்று பெயர்களும் சருவேசுரன் அந்தக் குடும்பத்திற்குக் காட்டின தயவை விபரிக்கின்றன.

**6.** தாயின் உதரத்தில் (15) — ஸ்நாபகர் சென்மபாவத்தில் உற்பவித்தாலும் எரேமியாசைப்போல (எரே. i. 5), பிறக்கமுதல் செண்மபாவத்தில் நின்று விடுதலையாக்கப்பட்டு இஸ்பிரீத்துவின் பிரசாதத்தால் நிரப்பப்பட்டார்.

**7.** பிதாக்களின் இருதயங்களை (17) — இந்த வசனத்தின் கருத்து "ஸ்நாபகர் அதிபிதாக்களிற் துலங்கின விசுவாசத்தை அவர்களுடைய பிள்ளைகளுக்கு வரப்பண்ணுவார்" என்பதாம். இது மெசியாவின் 2-ம் வருகைக்கு முன்னோடியான எலியாசைப்பற்றி மலக்கியாஸ் சொன்ன வசனம் (மல. iv 6). இதைக் கபிரியேல் மெசியாவின் 1-ம் வருகைக்கு முன்னோடியான (மல. iii. 1) ஸ்நாபகரைப்பற்றி விபரிக்கப் பாவிக்கிறார். ஏனெனில், ஸ்நாபகர் "எலியாசுடைய ஞானத்தையும், வல்லமையையும் உடையவனாய் நடப்பார்".

**8.** வெளிப்படாதிருந்து (24) — யூதர்களுக்குள் பிள்ளையில்லாமலிருப்பது இகழ்ச்சிக்குரிய ஒருகாரியம். எலிசபேத் இந்த இகழ்ச்சியினின்று சருவேசுரனுடைய கிருபையினல் நீக்கப்பட்ட நாட்களில் தாம் மறைவாக இருப்பது அவருக்குச் சித்தமாயிருக்கிறது என்கிறாள். மரியாயினுடைய சந்திப்பில்தான் யேசுவின் உற்பவத்தோடு ஸ்நாபகருடைய உற்பவமும் வெளிவிடப்படும். ஏனெனில், அதற்கிடையில் இந்தத் தேவசெயல்களைச் சரியாய் மதிக்கக்கூடியவர்கள் வேறொருவருமில்லை.

## முழுஇந்தியாவையுமே காப்பாற்றியது

கேரளஇராச்சியத்திலே ஜனநாயககட்சிகள் பொதுத்தேர்தலில் கம்யூனிஸ்தகட்சியைத் தோற்கடித்து ஈட்டியவெற்றியானது, "இந்தியாமுழுவதையுமே காப்பாற்றிய" ஒன்றெனவீரப்பளியின் அற்றிப்பெற்றி அதிமேற்றிராணியார் வர்ணித்திருக்கின்றார். இவர் கேரளஇராச்சிய கத்தோலிக்க மேற்றிராணிமார் சங்கத்தின் தலைவராவர். இந்த வெற்றியிலே அவ்விராச்சியத்திலுள்ள சாதாரண கத்தோலிக்கரும் பங்குபற்றியதற்காக அவர்களைப்புகழ்ந்து பாராட்டியிருக்கின்றார். தேர்தலில் அபேட்சகர்களாகநின்ற 15கத்தோலிக்கருமே தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

## குளோறின் உற்பத்திஆரம்பம்

இலங்கையிலே முதன்முறையாகப் பரந்தன் இரசாயனதொழிற்சாலை இப்போது "குளோறின்" உற்பத்தி செய்துள்ளது. தற்போது'குளோறின்' அங்கே போத்தல்களில் அடைக்கப்பட்டுவருகிறது. கூடியவிரைவிலே இவைகள் விற்பனைக்குஅனுப்பிவைக்கப்படுமெனத் தெரியவருகிறது.

சலதோஷம் உண்டாவதற்கான காரணங்களில் பெரும்பாலானவைகளை ஒழித்துவிடுமாறு அமெரிக்கமருந்துக் கம்பெனிஒன்று அம்மைப்பால் போன்று குற்றிக்கொள்ளும் ஒருபாலை விற்பனைசெய்யத் திட்டமிட்டிருக்கிறது. இவ்வருடம்முடிவதற்குள் இந்தப்பால் விற்பனைக்குக் கிடைக்குமென்று அமெரிக்க பார்க்டேரிஸ் கம்பெனியின்தலைவரான திரு. ஹரிவிடன்தெரிவித்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

## அன்புமிக்க இளைஞனே நீ வாசிப்பது என்ன?

சுவாமி மரியருள் தம்புராஜ், மதுரை.

[சென்றவாரத் தொடர்ச்சி]

### எதைத்தான் வாசிப்பது ?

வாசிக்க நல்லநூல்களே கிடையாதா? இலக்கியம், மொழி, நாடு, சமுதாயம், வரலாறு, ஆராய்ச்சி, கவிதை, காவியம், பொருளாதாரம், அரசியல் எனப் பல்வேறு தலைப்புகளில் எத்தனையோ நல்லநூல்கள் வெளிவந்துள்ளன. கத்தோலிக்க நூல்கள் என்ற வரிசையிலே ஆங்கிலம் அறிந்தோருக்கு ஆயிரம், ஆயிரம்நூல்கள் உண்டு. தமிழிலும் கணிசமான அளவிற்கு வெளியீடுகள் உண்டு. வேதஅறிவுநூல்கள், அர்ச்சியசிட்டவர்களின் சரித்திரங்கள், ஆன்மீக நூல்கள், சமூகநீதி, பொருளாதாரம், அரசியல்அமைப்பு முதலியனபற்றி விளக்கங்கள்தரும் அறிவுச்சுடர்கள், திங்கள்ஏடுகள், வாரஇதழ் முதலியன போதுமான அளவு உள்ளன. நல்வாழ்விலே நாட்டமும், ஞான வாழ்விலே தேட்டமும்தரும் நல்ல நூல்கள் இன்னும் பிரசுரமாகிக் கொண்டேயிருக்கின்றன.

கத்தோலிக்கநூல்களை, 'கீழுதமிழ்' என்று நையாண்டி செய்தகாலம் நிச்சயமாக மலையேறிவிட்டது. இந்த நூல்களிலே 'டாம், டூம்!' என்ற ஆவேசநடை இல்லாமற்போகலாம். பொருட்தெளிவற்ற புதுப்புதுப் பதங்கள் நடனமிடாமற் போகலாம். அங்கு குற்றாலஅருவியின் பேரொலியோ, காட்டாற்றின் வேகமோ தடதடக்கும் இடிமுழக்கமோ, சீறிவரும் புயலின் சீற்றமோ இல்லாமற்போகலாம். ஆனால், சிதறும் நரம்புகளையும் சாந்தப்படுத்தி, சின்னபின்னமாகும் சிந்தனையை ஒருமுகப்படுத்தி, ஆழ்ந்த உண்மைகளைத் தெள்ளத் தெளிந்த தீந்தமிழில்தரும் தெவிட்டாத பேரின்பம்உண்டு. நிறைகுடம் தளம்புவதில்லை. திருஇலக்கியம் தாளம்போடுவதில்லை.

### எதை வாசிக்கவேண்டும் ?

எதை வாசிக்கத் தவறினாலும், நமக்கு நித்திய வாழ்வைத்தரும் வேதாகமங்களை வாசிக்கத் தவறவே கூடாது. குடும்பங்களிலே இராச்செபம் முடிந்ததும் ஒருசிறுபகுதியையாவது வேதாகமத்திலிருந்து வாசித்த பின்னர் நித்திரைக்குச் செல்வது சிறந்த கத்தோலிக்கப்பண்பு. இளைஞனே, நீ கத்தோலிக்கன்என்று சொல்லிக்கொள்வதிலே பெருமைப்படுகிறாயே; உன்னிடம் புதியஏற்பாட்டுப்புத்தகமாவது இருக்கிறதா? அல்லது, ஒரு சுவிசேஷத்தையாவது வாசித்து முடித்திருக்கிறாயா?

நீதான் சுவிசேஷத்தை நம்புவதில்லையே! அந்தநூல்உன்னிடம் எங்கே இருக்கப்போகிறது!

"என்ன, சுவிசேஷத்தை நம்புவதில்லையா? யார் நம்புவதில்லை?" என்று எதிர்த்துக் கேட்கிறாயோ?

இளைஞனே, இறைவன் சுவிசேஷ வாயிலாக உன்னுடன் பேசுகிறார் என்று நீ நம்பினால், அந்தநூலைப் படிக்காமல்இருப்பாயா? 'கடவுளின் எண்ணம் என்ன? அவர் உன்னைப் பற்றி என்ன நினைக்கிறார்? உனக்கு என்ன கூறுகிறார்?' என்று அறிய விருப்பமா? "இறைவனின் இருதயத்தை அவருடைய வார்த்தைகளைப்படித்து அறிந்துகொள்!" என அறிவுரைகூறுகிறார் அர்ச். கிறகோரியார். ஏனெனில், "வேதாகமங்களால் உண்டாகிற பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கை உள்ளவர்கள் ஆகும்படி, அவைகளில் எழுதப்பட்டதெல்லாம் நமது படிப்பினைக்காகவே எழுதப்பெற்றன" (உரோ. 15: 4).

### வேதாகமங்களில் உள்ளது என்ன ?

வேதாகமங்களில் இல்லாத இலக்கியம் இல்லை, பொன்னுரைகள் கிடையாது. வேதாகமங்களை அறிந்தவன் உலகத்தையே அறிந்தவன். ஏனெனில், வேதாகமங்கள் முழுவதுமே ஒருபெரும் வரலாறு. தெய்வீகப் பராமரிப்பின் திருவரலாற்றுக் காவியம். பூமியும், அதில்நிறையாவும் படைத்தஇறைவன், பூமண்டத்தையும், அதில்வாழும் குடிகளையும் அரசோச்சியதைக்கூறும் அற்புதப் பனுவல். நன்மைக்கும், தீமைக்கும் மத்தியில் மனிதன்கண்ட போராட்டம், அவன் வீழ்ச்சி, எழுச்சி, பல்வேறு குணம்படைத்த மாந்தர்வரிசை, அவரதுவீரவாழ்க்கை, விபரீதப்போக்கு, சூழ்ச்சி, வெற்றி தோல்வி,...... வேதத்தின் வரலாறு, ஒழுக்கம்வகுத்த முறை, கடவுள் இயல்பு, கடவுளின் தூதர்கள், கடவுள்கூறிய இரகசியங்கள், மனிதமீட்பின் மாண்புற்ற வரலாறு, திருச்சபைத்தாயின் தொடக்க சரித்திரம் முதலியனவெல்லாம் வேதாகமங்களில் உள்ளன. படிக்கப் படிக்கத் தெவிட்டாத தெள்ளமுதாய், சிந்திக்கச் சிந்திக்கச் சிறப்புக் கருத்துக்கள் தரும் சீரியசிந்தனைக் கருவூலமாய் உள்ளவேதாகமங்களை விட்டுவிட்டு, வீதியில்கிடக்கும் குப்பையைக்கிண்டும் கீழ்புத்தி, கத்தோலிக்க இளைஞனே, நமக்கு வேண்டவே வேண்டாம்!

[வளரும்]

## உறுதிவாக்காளர் பகுதி

1. புதிய வாக்காளர் :

21. எஸ். வீ யோசெவ், — யாழ்ப்பாணம்.
22. ஏ. எம். வி. வென்செஸ்லோஸ், — நீர்கொழும்பு.
23. அல்பிறெட் செ. வஸ்தியாம்பிள்ளை, — சுண்டிக்குளி.
24. எம். ஜே. செபஸ்தியன் பெர்ணண்டோ, — உந்துகோடை.
25. அந்தோனி பெனடிற், — கொழும்பு.
26. தோ. அந்தோனி, — கறஸ்பெத்தா.

2. இம்மாசத்தில் தங்களது பிறந்த பெருநாளைக் கொண்டாடும் பின்வரும்வாக்காளர்களுக்குத் தேவ ஆசியையும், இளைஞர்பக்கத்தின் பேரால் மனமுவந்த சோபனமும் கூறுகின்றோம்.

15. பயஸ் வஸ்தியாம்பிள்ளை, பங்குனி 14.
18. குருகுல சூரிய டொலொறேஸ் மனல்ஜெனிற்ரு பெர்ணண்டோ பங்குனி 16.

## தபசுகாலத்தில் வரும் இரண்டாம் ஞாயிறு

**" அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்........ இதோ, மோயீசனும், எலியாசும் அவரோடு பேசிக்கொண்டிருக்கிறதைக் கண்டார்கள் " (மத். 17: 1—3)**

தபசுக்கு நம்மை அழைத்த கிறீஸ்துநாதர் அதன் சம்பாவனையின் மகத்துவத்தை இன்று வெளியிடுகிறார். தபசின் நோக்கம் ஞான சீர்திருத்தமே. கிறீஸ்துவின் ஞானச்சரீரமாகிய நாம் நாற்பது நாட்களில் உபவாசத்தினால் ஞான உறுதியடைந்து, பசாசை வென்று, நம் ஞான சிரமாகிய கிறீஸ்துவின் தபோர்மலையை அடைவோம். இன்றைய பூசையில் நாம் தியானிக்கும் கிறீஸ்து மறுரூபமான சம்பவம், நாமும் ஞானவிதத்தில் அந்நிலையடையும் குறிப்பாயிருக்கின்றது. "இங்கேயிருப்பது எவ்வளவோ நல்லது" என்று பேதுருவானவர் சொல்லுகிறார். ஆம், திவ்விய நற்கருணை உட்கொள்ளுவதினால் நமது ஆத்துமமும், சரீரமும் மறுரூபமடைந்து தம் நித்திய பேரின்பக் கூடாரங்களைக் கிறீஸ்துவினிடத்தில் அமைத்துக் கொள்ளும்.

இன்றைய பூசையில் மூன்று இடங்களில் தன் குற்றத்தையுணர்ந்த ஆத்துமம் படும் வேதனையும், தான் சுத்திகரிக்கப் படுவதற்காகக் கொள்ளும் ஆர்வமும் வெளியாகின்றன. இத்தகைய ஆத்துமத்தைத் தேற்றுவதற்காக இரு குரல்கள் கேட்கப்படுகின்றன: அர்ச். சின்னப்பர் தாயினும் மிக்க அன்புடன் நிருபத்திலே நம்முடன் பேசுகிறார். சுவிசேஷத்தில் பரமபிதா தமது திருக்குமாரனையே நம் ஞானச் சீவியத்தின் துணையாகக் கொடுத்து "இதோ, நமது பிரிய குமாரன்; இவருக்குச் செவிகொடுங்கள்" என்று கூறுகின்றார்—தினசரிப் பூசைப்புஸ்தகம்.

—(ᴗ)—

## செல்வர்க்கு ஈகையிருந்தால் ஏழைக்கு வாழ வழியிருக்கும்

(மேரி றேசலின் சூசைப்பிள்ளை)

தனது நான்கு குழந்தைகளுக்கும் நஞ்சூட்டித் தானும் மயக்கமுற்ற நிலையில் இருந்த ஓர் ஏழைப்பெண்ணும், குழந்தைகளும் தெய்வாதீனமாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு அவர்களுக்குச் சிகிச்சைஅளித்து மயக்கம் தெளிவித்த பெண்வைத்தியர் அப்பெண்ணைநோக்கி: "ஐந்து உயிர்களுக்கு ஒரே 'கூற்றம்'போலாகும்படி உனது இதயத்தைக் கடினப்படுத்திய இந்தச் சோகநிகழ்ச்சிதான் என்ன?

**ஏழைப்பெண் :** "அது ஒன்றிரண்டு நிகழச்சிகள் அல்ல அம்மா; என் வாழ்வே சோகசரித்திரம்தான். நான் ஓர் விதவை. எனக்குக் கைவழங்காது. என்னையும், பிள்ளைகளையும் ஆதரித்துவந்த என்சகோதரன் இறந்துவிட்டதாக இருவாரங்கள் கழித்து இன்று ஓர்தந்தி கிடைத்திருக்கிறது. இனி நாம்வாழ்வதற்கு ஆதாரம் என்னஉள்ளது."

**பெண்வைத்தியர் :** "மனதைத்திடப்படுத்திக் கடவுளிடம் முழுநம்பிக்கை வைத்து, நீ வாழ்வதற்கு இன்னுமென்ன வழிகள் உண்டுஎன்று சிந்திப்பதற்குப் பதிலாகக் 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான' கதையாக அநித்திய துன்பத்திற்குத் தப்பிக்கொள்வதற்காக நித்தியகேட்டிற்கு உள்ளாக்கும் தற்கொலையா நீ தெரிந்துகொண்ட ஆதாரம்?"

**ஏழைப்பெண் :** "கடவுளை நம்பி நம்பியிருந்து சகிக்கக்கூடிய யாவற்றையும் சகித்துவந்த படியால்தான் இன்றுஎனக்கு இந்நிலை ஏற்பட்டது. கடவுளைத்தேடாமல் அவரைத்தூஷணித்து நடப்பவர்களோ இடுக்கண் என்றால் என்னென்றறியாத நிலையில் சீவிக்கிறார்கள். ஆனால், என் வாழ்வில் இத்தகைய புயல்வீசும்படியாக நான் எந்தப்பாதகமும் புரியவில்லையே" என்றாள்.

**பெண்வைத்தியர் :** "அப்படிக் கூறாதே சோதரி. கெட்டவர்களைக் கடவுள் சோதிப்பதில்லை. தாம் நேசிப்பவர்களைத்தான் அதிகம் துன்பதுயரங்களுக்கு உள்ளாக்குகிறார். துன்பம் சிலுவைக்கு அடையாளம். தேவனின்மேல் நேசமில்லாதவர்களிடத்தில் சிலுவை எப்படிநிலைத்திருக்கும். தற்கொலை செய்யத் தூண்டும்படியல்ல; ஆனால், நம்பாவங்களுக்குரிய அநித்திய ஆக்கினையாகவும், இவ்வுலகஇன்பத்தின் நிலையாமையை நாம் உணர்ந்து நம்மனதைத் தம்மிடம் திருப்பிக்கொள்ளும் படியாகவும் தான் தேவன்நமக்குத் துன்பதுயரங்களை அனுப்புகிறார். இவ்வுலக துன்பங்களுக்குத் தப்பிக்கொள்ள வழி தேடும் நீ தற்கொலை புரிந்தபின் அதற்குரிய தண்டனையாகக் கிடைக்கும் நரகஆக்கினையை எப்படிச் சகித்துக்கொள்ளுவாய்?"

**ஏழைப்பெண் :** "அம்மா! சரீரமரணத்தினின்று என்னைக் காக்கும் பொருட்டுச் சிகிச்சைஅளித்த நீங்கள், அதேபோல் நித்தியமரணத்தினின்றும் என்ஆன்மாவைக் காப்பாற்றி அகக்கண்ணைத்திறந்துவிட்ட உங்கள் அறிவுரைக்கு என்நன்றி. நான் செய்யத்துணிந்த படுபாதகச் செயலின் கனகனத்தைத் தெளிவாய்க் கண்டுகொண்டேன். இரக்கமுள்ள தேவன்தான் உங்களை என்னிடம் அனுப்பி என்னை நரகக்குழியில் இருந்து மீட்டிருக்கிறார்" என்றாள்.

**பெண்வைத்தியர் :** "உன்னைமீட்டது மட்டுமல்ல, நீ வாழவும் வழிகாட்டியிருக்கிறார். அது எப்படியெனில் திக்கற்றவர்களுக்குத் திசையைக் காட்டும் தீபஸ்தம்பங்கள் போன்ற அநேகம் அனாதசாலைகள் நம் நாட்டில் உண்டு. அவற்றில் ஒன்றில்

(பாலர்பக்கம் பார்க்கவும்)

## எழுத்தாளர் மன்றம்

1. புத்திமதிகூறி எழுதும் கடிதங்கள் ஒருகுறித்த குற்றத்தைக் கண்டித்தும், அதை வெல்லுவதற்குரிய வழிகளைக் காண்பித்தும் எழுதப்படல் வேண்டும்.

2. கதைகள் மனுஷ சுபாபத்துக்குரிய பெலவீனங்களை வீரியத்துடன் ஜெயிக்கப் பிரயாசிக்கும் செயல்களைக் கொண்டனவாய் இருத்தல் வேண்டும்.

3. சம்பாஷணைகள்: ஏதோ நற்படிப்பினையைத் தருவனவாய் இருத்தல் வேண்டும். இம்மூன்று இனக் கட்டுரைகளில் ஏதொன்றிலாவது ஐந்துமுறைகளில் தாமனுப்பிய விஷயங்கள் பிரசுரிக்கப்பட்டிருப்போர் எமக்கு அறிவிப்பின் வெகுமதிக்கு உரியோராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



அன்புத் தம்பி, தங்கையரே!

உங்கள் எல்லோரிடமும் பல நற்குணங்கள் உண்டு என்பது சொல்லாமலே விளங்கும். ஆனல், பல துர்க்குணங்களும் இருக்கத்தான் செய்யும். அவைகள்தான் எங்கள் ஞானப் பூஞ்சோலையாகிய ஆத்துமத்தில் புண்ணியங்கள் எனப்படும் நறுமலர்களுக்கிடையில் காணப்படும் அவலட்சண களைகள், பூண்டுகளாகிய பாவங்கள். எங்கள் ஆத்தும நன்மைக்காக நொய்மையான பூங்கன்றுகளான புண்ணியங்களை அழிக்கும் பெரிய களைகளை மாத்திரமல்ல, சிறு பூண்டுகளையும் பிடுங்கிவிடவேண்டும். "ஓர் துர்ப்பழக்கத்தை எதிர்த்துக் களையாவிடில் அது சீக்கிரம் எங்களைப் பலவந்தப்படுத்தும்" என்கிறார் அர்ச். அகுஸ்தீனர்.

உங்கள் அன்புள்ள அண்ணா.

## எமது உடல்

'சிட்டு'

(2) எலும்புக்கூடு

உடலின் அமைப்பை உடலின் உறுதியான பகுதிகள், உடலின் மென்மையான பகுதிகளென இரு பிரிவுகளாகப் பிரிக்கலாமெனவும், இந்த உறுதியான பகுதிகளுக்குள் எலும்புக்கூடும் ஒன்றெனக் கண்டோம். எலும்புக்கூடானது உடலின் இயக்கத்தில் முக்கிய இடம் பெறுகிறது. நாம் ஒழுங்கான முறையில் நமது உடலின் உறுப்புகளை ஆட்டி அசைத்துத் தொழில் புரிய எலும்புகள் உதவி புரிகின்றன. எலும்புக்கூடானது உடலைத் தாங்கும் ஒரு சடம்போல் அமைந்து அதற்கு ஓர் உருவத்தையும் கொடுக்கின்றது. எலும்புக்கூடுடைய ஒவ்வொரு இன உயிரும் மற்றைய இன உயிர்களிடமிருந்து வேறுபட்ட உருப்பெறக் காரணம் இந்த எலும்புக்கூட்டின் அமைப்பு வித்தியாசமேயாகும். எலும்புக்கூடானது உடலின் மென்மையான தசைப் பகுதிகளுக்கு ஆதரவளிப்பதோடு உடலின் உயிர்ப்புக்கு மிகவும் அவசியமான உள்உறுப்புக்களையும் காக்கும் கவசம்போல் அமைந்திருக்கின்றது. மண்டை ஓடானது மூளையை மூடிக் காக்கிறது. விலாவெலும்புகளும், மார்பெலும்பும் சுவாசப்பைகள், இருதயம் முதலியவற்றை உள்ளடக்கிக் காக்கின்றன.

இவ்வாறு முக்கியத்துவம்வாய்ந்த எலும்புக்கூடானது 206 எலும்புகளின் இணைப்பினால் அமைந்துள்ளது. இந்த 206 எலும்புகளையும் கீழ்க்காணும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

| | |
|---|---|
| மண்டையோட்டு எலும்புகள் | 22 |
| முள்ளந்தண்டு எலும்புகள் | 33 |
| விலாவெலும்புகள் | 24 |
| மார்பெலும்பு | 1 |
| இடுப்பெலும்புகள் | 2 |
| கறை எலும்புகள் | 2 |
| தோட்பட்டை எலும்புகள் | 2 |
| கை எலும்புகள் | 60 |
| கால் எலும்புகள் | 60 |
| மொத்தமாக எலும்புகள் | 206 |

எலும்பானது சுண்ணம், ஒளிரி (Phosphorous) என்பனவற்றின் கூட்டுப் பொருட்களினால் ஆனது. எலும்புக்கு உறுதியளிப்பது ஒளிரியாகும். இதன் குறைவினால்தான் குழந்தைகளின் எலும்புகளும், குருத்தெலும்புகளும் இலகுவில் வசயக்கூடியனவாக இருக்கின்றன. அத்துடன் குழந்தையின் மண்டைஓட்டு எலும்புகளின் இணைப்புகள் இறுக்கமாக இருக்கமாட்டா வயதுமுதிர, முதிர இவ்விணைப்புகள் இறுகும். பிள்ளைகளின் தலையில்குட்டுதலும், காதைத் திருகுதலும், விளையாட்டாகக் கையில் பிடித்து அசட்டையாகத் தூக்கி மேல்எடுப்பதும், அங்கும் இங்குமாக இழுப்பதும் கெடுதி விளைவிக்கக்கூடிய செயல்களாகும்.

எலும்பானது சீரான வளர்ச்சியும், தகுந்த உறுதியும்பெறச் சுண்ணம், ஒளிரி முதலியன அடங்கிய உணவும், முறையான தேகப்பயிற்சியும் அவசியமாம். பால், வெங்காயம், முள்ளங்கி, கடலை, தோடம்பழம், எலுமிச்சம்பழம், வாழைப்பழம், பெருந்தக்காளி, கீரை வகைகள் முதலியவற்றில் சுண்ணச்சத்துண்டு. தேங்காய், தூதுவளை, திராட்சை, வெள்ளரிக்காய், கடலை, பச்சைக்காய்கறி, கனிகள் என்பனவற்றில் ஒளிரிச்சத்துண்டு. இவற்றை உணவாகக் கொண்டு, தகுந்த தேகப்பயிற்சியும் செய்து எலும்புகளின் வளர்ச்சியையும், உறுதியையும் பெருக்கிக்கொள்ளலாம்.

(தொடரும்)

## வாழைப்பழத் தோல்

கண்டி நகரத்தில் சிறில் என்னும் ஒரு சிறுவன் இருந்தான். அவன் தாய் ஒருநாள் படக்காட்சிக்கு அவனை அழைத்துச் சென்றாள். அவர்கள் படக்காட்சி தொடங்குவதற்குச் சிறிதுநேரம் முன்பதாகப் படமாளிகைக்குச் சென்றுவிட்டனர். அப்பொழுது பிரவேச அனுமதிச் சீட்டுக் கொடுக்கப்படும் அறை திறக்கப்படவில்லை. ஆதலால், அவர்கள் இருவரும் படமாளிகையின் அருகில் நின்ற ஒரு மரநிழலில் தங்கி நின்றனர்.

அவர்களின் அருகில் ஒருபழக்காரி பழம் விற்றுக்கொண்டிருந்தாள். தட்டில் இருந்த வாழைப்பழம் சிறிலுடைய கவனத்தைக் கவர்ந்தது. அவன் பழம் வாங்கித் தரும்படி தன் தாயாரைக் கேட்டான். அவளும் அவனுக்கு இரண்டுபழங்கள் வாங்கிக் கொடுத்தாள். சிறில் களிப்புடன் அவற்றை உரித்தான். தோலைத் தான் நின்ற இடத்திலேயே எறிந்துவிட்டுப் பழங்களைத் தின்றான்.

சிறிதுநேரம் கழித்துப் பிரவேச அனுமதிச் சீட்டுக் கொடுக்க ஆரம்பித்தார்கள். சிறிலின் தாயார் அதனை வாங்குவதற்கு விரைந்து சென்றாள். வழியில் சிறில் வீசி எறிந்த வாழைப்பழத் தோலின் மீது ஒருகாலை வைத்துவிட்டாள். அதனால் அவள் சறுக்கிக் கீழே விழுந்தாள்.

தலையில் பலமான காயம் பட்டதால் விழுந்தவள் எழுந்திருக்கவில்லை. சிறில் ஓவென்று கதறி அழுதான். மக்கள் கூடிவிட்டார்கள். அவர்கள் ஒரு மோட்டர்வண்டியில் சிறிலின் தாயாரை ஏற்றி வைத்தியசாலைக்குக் கொண்டுபோனார்கள்.

வைத்தியர் காயத்தைப் பரிசோதித்தார். காயம் அபாயகரமானதாக இருந்தது. அதனால் அவர் சிறிலின் தாயாரைச் சில நாட்கள் வைத்தியசாலையிலேயே இருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டார். சிறில் தாயாரை அங்கு விட்டுவிட்டுத் தான்மட்டும் அழுதுகொண்டு வீடுபோய்ச்சேர்ந்தான்.

வீட்டில் இருந்தவர்கள் நடந்தவற்றை அறிந்ததும் வைத்தியசாலைக்கு விரைந்துசென்றார்கள். சிறில்மட்டும் வீட்டில் அழுதுகொண்டே இருந்தான். தான் கவனமின்றி வீதியில் எறிந்த வாழைப்பழத் தோலால் ஏற்பட்ட விபத்தைப்பற்றி நினைக்க நினைக்க அவனுக்கு ம[illegible] தன் தாயாருக்கு ஏற்பட்ட ஆபத்தால் அவள் ஒருவேளை இறந்துவிடுவாளோ என்று எண்ணியபோது அவன் உள்ளம் பதறியது.

நல்லகாலமாகச் சிறிலின் தாயார் சிலநாட்களில் குணமடைந்து வீடு வந்து சேர்ந்தாள். அன்றுமுதல் சிறில் வாழைப்பழம் தின்றால் அத்தோலைக் குப்பைத் தொட்டியில் போடத் தவறுவதில்லை. அவன் வீதியில் செல்லும்பொழுதும் கீழே வாழைப்பழத்தோலைக் கண்டால் அதனை எடுத்து ஓரமாகப் போடுவான். ஆணி, குண்டூசி, கூரிய கல் முதலியவற்றைக்கண்டாலும் அவன் அவற்றையும் அப்புறப்படுத்தாமல் போவதில்லை.

வீதியில் நடக்கும் ஒவ்வொருவரும் இப்பழக்கத்தைக் கையாண்டால் அறியாமையாலும், அலட்சிய புத்தியாலும் ஏற்படும் அநேக ஆபத்துகள் நீங்கும்.

எம். வேல்ஸ் வஸ்தியான்,
கொழும்பு.

## எழுத்தாளனாக வேண்டுமா?

— வே. சா. —

உங்களிற் பலருக்குப் பத்திரிகைகளுக்குக் கதைகள், கட்டுரைகள் எழுதவேண்டுமென்று ஆசை உண்டு அல்லவா? அப்படியானால் நான் சொல்வதைச் சற்றுக் கவனியுங்கள்.

இன்று பெரும் எழுத்தாளர்களெனக் கருதப்படும் பலர் உங்களைப் போலப் பத்திரிகைகளுக்குக் குட்டிக் கதைகளும், கட்டுரைகளும் எழுதிய பேர்வழிகளே. அவர்கள் திடீரெனப் பெரிய எழுத்தாளர்களாகிவிடவில்லை என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள்.

"பானையில் இருந்தாலல்லவா அகப்பையில் வரும்" என்பது ஒரு பழமொழி. ஆகவே, நாம் பலநூல்களை வாசித்து, நமது அறிவை வளர்க்கவேண்டும். "நூலளவேயாகும் நுண்ணறிவு" என்பது ஆன்றோர் வாக்கு. உங்கள் தரத்திற்கு ஏற்றபடி நல்ல புத்தகங்களை வாசியுங்கள். அப்பொழுதுதான் நீங்கள் எழுத்துலகில் முன்னேறமுடியும்.

உங்கள் மனதில் ஏதாவது கற்பனைக்கதையோ, கட்டுரையோ உதித்தால் அவற்றை உடனேயேஎழுதுங்கள். பின்போட்டுவைத்தால் மறந்துவிடுவீர்கள். இன்று எழுத்துலகில் முன்னணியில் விளங்கும் எழுத்தாளர்களில் ஏறக்குறைய எல்லோரும் ஏதாவதுஒன்றை எழுதத்தொடங்கிவிட்டால் அது முடியும்வரை வேறொன்றுமே செய்யமாட்டார்கள்.

கதைகள், கட்டுரைகள் எழுதி முடிந்ததும் அவற்றைப் பலமுறை வாசியுங்கள். உங்களுக்குச் சந்தேகமென்று படுவதை மற்றவர்களுக்குக் காட்டித் திருத்துங்கள். இப்படிச் செய்தபின்பு உங்கள் விஷயதானத்தை அழகான சிறுசிறு பந்திகளாக எழுதி அனுப்புங்கள்.

சிலர் தாம்அனுப்பிய விஷயதானமெல்லாம் பத்திரிகையில் வெளிவர வேண்டுமென்று எதிர்பார்க்கிறார் [illegible] மூன்று விஷயங்கள் வெளிவராமல் விட்டுவிட்டால் இவர்களுக்கு எழுத்துத்துறையில் சோர்வு தட்டிவிடும். அத்தோடு எழுதுவதை நிறுத்திவிடுகிறார்கள். ஆகவே, நீங்கள் அனுப்பும் விஷயங்கள் வெளிவராவிட்டாலும் சோர்வடையாமல் தொடர்ந்து எழுதுங்கள். நிச்சயம் தேறுவீர்கள்.

சிறுவர், சிறுமியரிடமிருந்து சிறுகதைகள், கட்டுரைகள், அர்ச்சியசிஷ்டர்களின் சுருக்கமான வரலாறு, விடுகதைகள், காஷ்யமான சம்பாஷணைகளை அண்ணா எதிர்பார்க்கிறார்.

அண்ணாவின் முகவரி:

அண்ணா,
புனித அன்னாள் கோவில்,
பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம்.

## செல்வர்க்கு ஈகையிருந்தால் ஏழைக்கு வாழ வழியிருக்கும்

[இளைஞர்பக்கத் தொடர்ச்சி]

உன் குழந்தைகள் சேர்ந்து படிப்பதற்கு ஒழுங்குசெய்து விடுகிறேன்" என்றார்.

ஏழைப்பெண்: "உங்கள் கருணைக்கு நான் நன்றிகூறுகிறேன். உங்களுக்கு இப்பரோபகார சிந்தையை அளித்ததேவனுக்கு என்னுடன் சேர்ந்து நன்றிகூறுங்கள்."

மோட்டார்சைக்கிள் ஓட்டவோ அன்றேல் ஆகாயவிமானத்தைச் செலுத்தவோ கால்கள்வேண்டியதில்லையென்று அல்பேர்டோ ஹொருஷியோ என்பவர் நிரூபித்திருக்கிறார். இற்றைக்கு ஓராண்டின்முன் ஒரு றெயின்வண்டிவிபத்தில் இரண்டுகால்களையுமே இழந்துபோனஇவர் உடல் தேறியபின் செயற்கைக்கால்களைப் பொருத்திக்கொண்டு நடக்கக்கற்றார். பின்னர் மோட்டார்சைக்கிள் ஓட்டக் கற்றார். இப்போது விமானம்செலுத்தத் தொடங்கியிருக்கிறார்.

* * *

### வானவெளிக்கு மனிதன்

அடுத்துநிகழும் 1961-ம் ஆண்டிலே ஒருமனிதனைறொக்கெற்ஒன்றின்மூலம் வானவெளிக்கு அனுப்ப அமெரிக்கா ஏற்பாடு செய்துவருவதாய் அமெரிக்க தேசீய வானவெளிப் பகுதியைச் சேர்ந்த திரு. ஜோர்ஜ் லோ சென்ற 17-ந் திகதியன்று வாஷிங்ரன் நகரில் தெரிவித்திருக்கின்றார். இந்த றொக்கெற் சுமார் 120 மைல்உயரத்திலே உலகை மூன்றுமுறை ஏறக்குறைய 27,500 மைல்வேகத்திலே சுற்றியபின் பூமியை நோக்கித் திரும்பிப் பதினாயிரம் அடி உயரத்தில் வரும்பொழுது அதிலுள்ள மனிதனைப் பாசூட்மூலம் பூமிக்கு அனுப்பிவைக்குமென்றும், இந்தப் பாசூட்டும் அத்திலாந்திக்சமுத்திரத்திலே புளோறிடாக் கரையருகே இறங்குமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NOTICE

M. D. J. Nicholas Appuhamy of The Lanka Musical Works will be at Jaffna for Three Weeks from 1st March, 1960, at The Renown Bakery, Small Bazaar, Jaffna to undertake the Repairing and Tuning of all Musical Instruments, Piano, Organ, Harmonium etc.

Repairing of Type-writers is also undertaken.

**M. D. J. Nicholas Appuhamy,**
Bopitiya,
Pamunugama.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2306**

***யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்***

மானிப்பாய் தெற்கு
1. எஸ். அழகானந்தமும்
2. பெண் சகுந்தலாவும்
— வழக்காளிகள்.

எதிராக, கொக்குவில் கிழக்கு
1. பொன்னம்பலம் அப்பையாவும்,
2. பெண் தங்கம்மாவும்
3. செல்லப்பா ஆறுமுகமும்
4. பெண் அன்னலெட்சுமியும்
— எதிராளிகள்.

1. நல்லையா இராசநாயகமும், பெண் கமலலெட்சுமியும்.
உரும்பிராய்
2. வல்லிபுரம் அப்பாத்துரையும்,
3. பெண் தங்கரெட்டினமும்
யாழ்ப்பாணம், ஒட்டுமடம்
4. கந்தப்பசேகரர் இரத்தினசபாபதி.
கொக்குவில் கிழக்கு
5. கார்த்திகேசு வைத்திலிங்கம்.
6. செல்லப்பா ஆறுமுகமும்,
7. பெண் அன்னலெட்சுமியும்.
வெள்ளவாய்க்கால் நல்லூர்
8. வைரவி வேலுவும்.
— வெளிப்படுத்தப்பட்ட பகுதியார்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2306-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகளை 1960-ம்ஆண்டு சித்திரைமாதம் 23-ந்திகதி (23-4-60) சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு அந்தந்தக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 12,380-உம், இன்னும் ரூபா 8,000-த்திற்கு 1958-ம் ஆண்டு ஆடிமாதம் 1-ந்திகதி தொடக்கம், 1959-ம்ஆண்டு புரட்டாசிமாதம் 9-ந்திகதிவரையும் 100-க்குப் 12%வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 424 ரூபா 20 சதமும்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்கோயிற்பற்று, கொக்குவில் கிழக்குஇறை "நம்பிச்சம்புறுக்கும், மறுபிரிவுகளும்" பர. நில. இலா. 44-உம், குளி $8\frac{13}{16}$-உம், கிணறும், பயிர்வகைகளும், வடக்கேயுள்ள கைஒழுங்கையில் பங்கும். எல்லை: கிழக்கு — கே. நன்னித்தம்பியின் உரித்தாளரின் ஆதனம். — வடக்கு சின்னத்தம்பி ஐயாத்துரையின் உரித்தாளரின் ஆதனமும், கைஒழுங்கையும். மேற்கு — சின்னப்பு அழகக்கோனுக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனங்கள். தெற்கு — சிதம்பரப்பிள்ளை சரவணமுத்துவுக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனங்கள். இதடங்கலும் முற்பதிவு D 222/184.

2. ஷை கொக்குவில் கிழக்குஇறை "அல்லைக்காடு" பர. நில. இலா. 33-உம், குளி $9\frac{5}{8}$-உம். இதில் 1948-ம்ஆண்டு தைமாதம் 25-ம் திகதி உலாந்தாமேஸ்தர் T. சின்னத்துரை அவர்களால் 235 B இலக்க அளவுபடத்தில் 2என்னும் இலக்கத்தால் சுட்டப்பட்ட பிரிவிடப்பட்ட துண்டு ப. நி. இ. 2. குறித்த 2என்னும் இலக்கத்தில் சுட்டப்பட்ட துண்டிற்கு எல்லை: கிழக்கு — றோட்டு. வடக்கு — 1-ம்நம்பர் துண்டு. மேற்கு — ஆறுப்பிள்ளை கந்தையாவிற்கும், பெண் இராசேஸ்வரிக்கும் உரிய ஆதனங்களும், இராமு செல்லத்துரையின் ஆதனங்களும். தெற்கு — 3-ம்நம்பர் துண்டு. இதடங்கலும் முற்பதிவு D 192/141.

3. ஷை கொக்குவில் கிழக்குஇறை "அல்லைக்காடு" பர. நில. இலா. 33-உம், குளி $9\frac{5}{8}$-உம். இதில் 1948-ம்ஆண்டு தைமாதம் 25-ந்திகதி உலாந்தாமேஸ்தர் T. சின்னத்துரை அவர்களால் 235 Bஇலக்க அளவுபடத்தில் 1என்னும்இலக்கத்தால் சுட்டப்பட்ட பிரிவிடப்பட்டதுண்டு ப. நி. இ. 3 குளி $9\frac{5}{8}$. குறித்த ஒன்றுஎன்னும் இலக்கத்தால் சுட்டப்பட்டதுண்டிற்கு எல்லை: கிழக்கு றோட்டு. வடக்கு — ஆறுப்பிள்ளை கந்தையாவிற்கும், பெண் இராசேஸ்வரிக்கும் உரியஆதனம். மேற்கு — ஆறுப்பிள்ளை கந்தையாவிற்கும், பெண் இராசேஸ்வரிக்கும் உரியஆதனம். தெற்கு — இரண்டாம்நம்பர் துண்டு. இதுஅடங்கலும் முற்பதிவு D 165/128.

**தா. செல்லையா,**
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 37. கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1939**

வண்ணார்பண்ணை கிழக்கு
சுப்பையா பொன்னம்பலம் கந்தையா
— வழக்காளி.

எதிராக, நாவாந்துறை
1. சவிரிமுத்து பாவிலு கைம்பெண் நீக்கிலாள்
2. சுவாம்பிள்ளை மரியாம்பிள்ளையும், மனைவியும்
3. சொலமி
4. மாரிமுத்து நாகலிங்கம் நவரத்தினம்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1939-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியும், ஒருகாரும் (Car), 1960-ம்ஆு சித்திரைமீ 7-ந்உ வியாழக்கிழமை (7-4-1960) பிற்பகல் 2மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 29,032-உம், இன்னும்ரூபா 2,500-க்குப் 14-11-57 தொடக்கம், 14-2-58வரையும் 18%வட்டி கொடுக்கும்வரையும் இறுக்க வேண்டும். கோட்டுச்செலவு 233 ரூபா 12சதம்.

### காணி விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்குஇறை "நாவலடி" என்னும்காணி நில. பர. இரண்டும் (2பரப்பு), அத்திவாரமும், வீடும், தலைவாசலும், செய்பயிர் வான்பயிர்களும், கிணறும். எல்லை: கிழக்கு — பிலிப்பு மரியாம்பிள்ளை மனைவி திருஸ்அம்மாவுக்கும், சவிரிமுத்து மனைவி வைத்தியின் உரிமைக்காரருக்கும், மற்றவர்களுக்கும் உரியஆதனம். வடக்கு — ஒழுங்கை. மேற்கு — மரியாம்பிள்ளை மனைவி சொலமையின் ஆதனம். தெற்கு — வைத்தி அதிரியானுக்கும், சகோதரனுக்கும், மனுவல் பெண் செல்லாச்சிக்கும், சகோதரங்களுக்கும் உரியஆதனம். இது அடங்கலும் சொரியலாய் $\frac{2}{3}$பங்கும், அதைச் சேர்ந்தவைகளும். பதிவுஇலக்கம் D 178/269.

2. ஒருபோட் கொன்சல்கார் (Ford Consul Car) நம்பர் E. L. 4042. பதிவு இலக்கம் (Yen) 5/154.

**இ. கனகரத்தினம்**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
நம். 35, கொழும்புத்துறைறோட்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,
28-2-60.

### நன்றித் துதி

எனது மகனுக்கேற்பட்ட வருத்தத்தின்போது, கோடிஅற்புதரான அர்ச். அந்தோனியாரிடமும், நித்திய சகாயமரியிடமும் நான்உருக்கமாக வேண்டிக்கொண்டமன்றாட்டின்பேரில் எனது செல்வமகன் பூரணசுகம் அடைந்துவிட்டார். நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

அங்கம்பிட்டி தாயின் தனயன்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2609**

***யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்***

காரைநகர் களபூமி
சின்னக்குட்டி கந்தையா
— வழக்காளி.

எதிராக
வண்ணார்பண்ணை வடமேற்கு, பழம்றோட்
மாணிக்கம் இராசதுரை
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2609-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1960-ம்ஆண்டு சித்திரைமாதம் (ஏப்ரல்) 9-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் பத்துமணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,787-50-உம், மேலும் 1,500 ரூபாவுக்கு 20-12-58 திகதி தொடக்கம் 14-7-59 திகதி வரைக்கும் வருடமொன்றுக்குப் 15%வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரைக்கும் வருடமொன்றுக்கு 5%வட்டியும், கோட்டுச் செலவு 181ரூபா 02சதமும். இதில் வழக்காளிக்குக்கொடுத்த 150ரூபா குறைய.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று, வண்ணார்பண்ணை வடமேற்கிறை "மந்திபுலம்" நிலப்பரப்பு 4, குளிகள் 8.9, வடக்குக் காணியில் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், பயிர்களும். எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு — வைரவி நாகலிங்கத்துக்குரிய ஆதனம். மேற்கு — பாதை. தெற்கு — ஒழுங்கை. பதிவுஇலக்கம் D 254/192.

**வி. செ. குட்டிப்பிள்ளை,**
கொமிஷனர்.
643, காங்கேசன்துறை வீதி,
வண்ணார்பண்ணை, 16-2-60.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2459**

காரைநகர் மேற்கு
சுப்பிரமணியம் பொன்னம்பலம்
— வழக்காளி.

எதிராக, வண்ணார்பண்ணை மேற்கு
1. சாகுல் கமீது மொகமெட் கசேயின் தம்பி தனக்காகவும், ஈடுவைத்துக் காலஞ்சென்றுபோன நபிசாவின் ஆதனத்தின் பிரதிநிதியாகவும்.
2. மடார் சகிப் சாகுல் கமீத்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2459-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டுதுண்டுக் காணிகளை 1960-ம்ஆு சித்திரைமீ 16-ந்உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 11,312-50-உம், 23-9-58 தொடக்கம், 31-7-59 வரைக்கும் ரூபா 6,000-த்துக்குப் 15வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 337ரூபா 33சதமும்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வண்ணார்பண்ணை கோயிற்பற்று, வண்ணார்பண்ணை வடமேற்குஇறை "பரந்தன் புளியடி" நிலப்பரப்பு $\frac{7}{8}$-உம், வீடும், தெற்கெல்லைக் காணியில்இருக்கும் கிணற்றில் பங்கும், வழிவாய்க்கால் பாவிப்பு உரித்தும். எல்லை: கிழக்கு — றோட்டு. வடக்கு — சின்ன மரைக்கார் பெண் மொகமெட்மீரா நாச்சியாவின் உரிமைக்காரரின் ஆதனம். மேற்கு — நீயனுபிள்ளை மரைக்கார் பெண் மொகமெட் கனிடம்மாவின் ஆதனம். தெற்கு — சுல்தான் சேக்கத்தர் பெண் பதும்மாநாச்சியாவின் ஆதனம். இக்காணி யாழ்ப்பாணம் காணிப்பதிவுகந்தோரில் $D\frac{185}{71}$ இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. ஷை இறை "பரந்தன்புளியடி" நிலப்பரப்பு $1\frac{1}{8}$-உம், கல்வீடும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு — றோட்டு. வடக்கு — சேகுமடார் லெபே அல்லாபிச்சையும், பெண் முத்தம்மாவின் ஆதனமும். மேற்கு — வப்பா சகிப் கச்சுமுகமதுவின் ஆதனம். தெற்கு — சுல்தான் அப்துல்காதர் பெண் மீராமுகைதீன் நாச்சியாவின் ஆதனம். இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப்பதிவுகந்தோரில் D $\frac{206}{53}$ இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது.

**அ. ஜெகநாதன்,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 6, 2-ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1433**

மானிப்பாய்
சிவக்கொழுந்து முத்துக்குமாரசாமி
— வழக்காளி.

எதிராக
வண்ணார்பண்ணைமேற்கு, கமல்ஒழுங்கை
1. சுல்தான்கண்டு கமீதும், கைம்பெண் சுல்தான்கண்டு நாச்சியாவும்
மானிப்பாய் தெற்கு
2. தம்பிப்பிள்ளை அரியசுந்தரம் போலும், பெண் விக்ரோறியா இராசம்மாவும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1433-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகளை 1960-ம்ஆு வைகாசிமீ 7-ந்உ சனிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,936-50-உம், 17-1-57 தொடக்கம் 26-8-58 வரைக்கும் ரூபா 1,200-க்குப் 12வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 225ரூபா $72\frac{1}{2}$சதமும்.

### ஆதன விபரம் "A"

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வண்ணார்பண்ணை கோயிற்பற்று, வண்ணார்பண்ணை மேற்குஇறை "மாகாதேவன் புலம்" நிலப்பரப்பு 1-உம், கல்வீடும், மேற்குஎல்லைக் காணியில்இருக்கும் கிணற்றில் பங்கும், செய்பயிர்களும். எல்லை: கிழக்கு — பவகானி பெண் மீராமுகைதீன் நாச்சியாவின் ஆதனம். வடக்கு — மண் றோட்டு. மேற்கு — மொகமெட் முகைதீன் கபீப் மொகமெட்டின் ஆதனம். தெற்கு — வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தின் ஆதனம். இதில்சொரியலாய் அரைவாசி. பதிவுஇலக்கம் D122/207

### ஆதன விபரம் "B"

ஷைஇறை "மகாதேவன்புலம்" நிலப்பரப்பு 1-உம், குளி $1\frac{1}{2}$யும். இதில் லொட் ஒன்று (1) என்று அடையாளமிடப்பட்ட $9\frac{3}{4}$குளியும், அதற்குச் சேர்ந்தவைகளும் நான்கு தென்னைமரங்களும், ஐந்து கமுகு மரங்களும், அரைவாசிவீடும், அரைவாசிக் கிணறும் எல்லை: கிழக்கு — லொட் இரண்டு (2). வடக்கு — கமல் ஒழுங்கை. மேற்கு — M. M. கபீப் மொகமெட்டின் ஆதனம். தெற்கு — ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமியின் ஆதனம்.

**அ. ஜெகநாதன்,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 6, 2-ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

### நன்றித் துதி

நம்பினோரை ஆதரித்து அரவணைக்கும் பரி. சதாசகாயமாதாவின் இரக்கத்தாலும், பாலைதீவு, அர்ச். அந்தோனியாரின் சகாயத்தாலும் நான் இரந்துகேட்டபடி சுகம்கிடைத்தது. இன்னும் பூரணசுகம் பெற இவர்களை இரந்துமன்றாடி, நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

பேசாலை. எஸ். டேவிற் பீரிஸ்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, March 10-1960.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org